www.padippakam.com


# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 41 | 01 ஆடி 1998 | விலை: ரூபா 7.00


## 10வது சார்க்(SAARC) மகாநாட்டுக்கான இந்தியப் பிரதமர் வருகை

# இனப்பிரச்சினை தீர்வுக்கு உதவுமா?

ஜூலை மாதம் 29ம் திக்தி இந்தியப் பிரதமர் 10வது சார்க் உச்சி மகாநாட்டிற்காக இலங்கை வருகின்றார். இந்தியப் பிரதமரின் இலங்கை வருகையானது இனப்பிரச்சினைத்தீர்வுக்கு உதவவேண்டுமென தமிழ்மக்கள் எதிர் பார்க்கின்றார்கள்.


ராஜீவ் காந்தியின் பின்னர் இந்தியாவின் பிரதமர்களான வி.பி. சிங், நரசிம்மராவ், தேவ கௌடா, குஜ்ரால் போன்றவர்கள், இலங்கை இனப்பிச்சினைக்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்ற அணுகுமுறையிலேயே செயலாற்றி வந்தார்கள்.


ஆனால் அடல்பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான பாரதீய ஜனதா அரசாங்கமானது இலங்கைப் பிரச்சினை தொடர்பாக வித்தியாசமான ஓர் அணுகுமுறையை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் வெளியுறவுத்துறை ஆலோசகரான முன்னாள் இந்தியத்தூதுவர் என்.என்.ஜாஅவர்கள்அண்மையில் கொழும்புக்கு வந்திருந்தபொழுது இலங்கைப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென்பதை தெளிவாகக் கூறியிருந்தார். வட-கிழக்கு இணைப்பு என்பது இனப்பிரச்சினை தீர்விற்கான முக்கிய அம்சம் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். “ஜா” அவர்களின் கூற்றுக்கள் சிங்கள இனவாதிகள் மத்தியில் சீற்றத்தையும் ஏற்படுத்தி இருந்தது. ஈ.பி.ஆர்.எல்.எவ். முக்கியஸ்தர்கள் மே மாதம் டெல்கி விஜயம்செய்து திரு ஜா உட்பட பல முக்கிய அமைச்சர்கள், தலைவர்களைச் சந்தித்த பொழுதும் இலங்கை இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென்பதைத் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.


இந்தியா, பாகிஸ்தானில் அண்மையில் நடந்த அணுகுண்டுப் பரிசோதனையுடன்,இப்பிராந்தியத்தில் இப்பிராந்தியத்தில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என எதிர்பார்க்கலாம். முக்கியமாக இந்தியாவின் அணுவெடிப் பரிசோதனையானது அமெரிக்காவை சீற்றம் கொள்ளச் செய்துள்ளது. அதுமாத்திரமல்லாமல் இந்தியாவை ஓர் அணு வல்லரசாக உருவாக விடக் கூடாது என்பதே அமெரிக்காவின் கொள்கையாகஉள்ளது. இதற்காக பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளையும் அமெரிக்காஅறிவித்துள்ளது. ஆனால் அமெரிக்கத் தடைகளை மீறி இந்தியா தனது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் பலம் அதற்குள்ளது என்பதையும்அமெரிக்கா அறிந்து வைத்துள்ளது.


இந்நிலையில் பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும், இந்தியாவை தொடர்ச்சியாகச் சீர்குலையச் செய்வதன் மூலமே, இந்தியாவை அடிபணிய வைக்கமுடியும் என அமெரிக்கா சிந்திக்கக் கூடும். ஏற்கனவே காஷ்மீர் பிரச்சினை உட்பட பல பிர்ச்சினைகளை வடபகுதியில்கொண்டுள்ள இந்திய அரசுக்கு, தென்பகுதியிலும் பிரச்சினைகளை உருவாக்க அமெரிக்கா விரும்பலாம். இதற்கு அமெரிக்க அரசின் உளவு நிறுவனங்களானசி.ஐ.ஏ.யும் பயன்படுத்தப்படலாம். இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்வதானது இப்படியான அந்நிய சக்திகள் இலங்கையில் வந்து தளங்களை அமைத்துக் கொள்ள பெருமளவு வாய்ப்பைக் கொடுக்கின்றது. எனவே, அமைதியான இலங்கைதான், இந்தியாவின் ஸ்திரத்தன்மைக்கு அவசியமானதாகும். இந்த அடிப்படையில் இலங்கை தொடர்பான தீர்க்கமான கொள்கை ஒன்றை வகுக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு உள்ளது.

மாநாட்டிற்கு வருகை தரும் இந்தியப் பிரதமர், தனது நிகழ்ச்சிநிர்லில் முக்கியமான விடயமாக இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அணுகுமுறைகளில் ஈடுபடுவார் என்பதும் தவிர்க்க முடியாததாக இருக்கும்.

















### மேதகு ஜனாதிபதி அவர்கட்கு!

உங்களது உத்தரவிற்கிணங்க யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இதுவரை வழங்கி வந்த உணவு நிவாரணத்தில் பாரியளவு குறைப்பதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் முடிவெடுத்திருப்பதாக அறிகின்றோம். இது வடக்கில் இருக்கும் மக்களை பட்டினிச் சாவுக்கு இட்டுச் செல்லும் என அஞ்சுகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் பாரிய பிரதேசம், பாதுகாப்பின் நிமித்தம் இன்னும் மக்கள் மீளக்குடியேற முடியாத பிரதேசமாகவே உள்ளது. மீளக்குடியேறிய மீனவர்கள் 500மீற்றர் தொடக்கம் ஒரு கிலோ மீற்றர் வரையிலுமே மீன்பிடிக்க அனுமதி. அதிலும் பல இடங்களில் மீன் பிடிக்கத் தடை. மீள்குடியேறிய விவசாயிகளுக்கு சந்தை வாய்ப்பே இல்லை. பல விவசாய நிலங்கள் கண்ணி வெடியால் நிறைந்து போயுள்ளது. மறுபுறத்தில் தொடர்ச்சியான யுத்தம், தொடர்ச்சியாக அகதிகளையே உருவாக்கி வருகின்றது. இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சியில் மக்கள் குடியேற அனுமதிக்கப்படவில்லை. வவுனியாவில் இருந்து மன்னாருக்கு வீதியைத் திறந்தது, வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான வீதியைத் திறப்பதற்கான “ஜெயசிக்குறு” ஒப்பரேசன் போன்றவற்றால், ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகிக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் இம் மக்களின் உலர் உணவை வெட்டுவதென்பது வேதனைக்குரியது.

ஜனாதிபதி அவர்களே!

யுத்தத்தை தொடர்ந்து நடர்த்துவதற்காக 4வீதம் பாதுகாப்பு வரி அறவிடுகின்றீர்கள். இனமத வேறுபாடின்றி, ஏழை பணக்காரன் வேறுபாடின்றி, யுத்தத்துக்குப் பணத்தை திரட்டுகின்றீர்கள். வருடாந்தம் 500 கோடி ரூபாவிற்கு மேல் நீங்கள் இவ் அநாவசிய யுத்தத்தினால் உருவாகும் அகதிகளுக்கு மாதாந்தம் 24கோடிரூபா செலவுசெய்து உணவு நிவாரணம் வழங்க நீங்கள் மறுதலிப்பதும், அதனை திடீர் திடீர் என நீங்கள் குறைப்பதும், மக்கள் தமது வாழ்க்கையின் மீதே விரக்தி கொள்ளச் செய்கின்றது.

வட-கிழக்கின் எல்லைக் கிராமங்களில் இருந்து யுத்தத்தினால் அகதிகளாகிய, சிங்களமக்களும், புலிகளால் விரட்டப்பட்ட முஸ்லீம் மக்களும் தமது நிவாரணங்களை எவ்வித இடையூறும் இன்றி தொடர்ந்து பெறும் அதே சமயம், தமிழர்களுக்கான நிவாரணங்களை நீங்கள் குறைப்பதென்பது, ‘ஒரேமக்கள் ஒரே தேசம்’ என்ற உங்கள் கோட்பாட்டின்மீதும், இனவாதத்துக்கு அப்பாற்பட்ட முதலாவது ஜனாதிபதி என்ற நம்பிக்கை மீதும் கேள்விகளையே எழுப்பும்.

வடக்கில் இருக்கக்கூடிய ஒவ்வொரு மாவட்டத்திலும், எவ்வாறான சூழ்நிலை நிலவுகின்றது என்பதை நாம் சொல்லித்தான் நீங்கள் புரிய வேண்டுமென்பதல்ல. எனவே அகதிகள் பிரச்சினையை மிகவும் மனிதாபிமானத்துடன் அணுகும்படி தங்களை வினயமாக வேண்டுவதுடன், உலர் உணவுகளைக் குறைப்பதாக எடுத்த முடிவுகளை மீள் பரிசீலனை செய்யுமாறும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம்.

29 ஆனி 1998, யாழ்ப்பாணம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
EELAM PEOPLE'S REVOLUTIONARY LIBERATION FRONT

படிப்பகம்

# அச்சம் தவிர்!

இந்த நாட்டின் ஜனாதிபதி முதல் சாதாரண குடிமக்கள் வரை அனைவரும் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை பாதுகாப்பு பற்றியதே என்பது யாவரும் அறிந்த உண்மை. பாதுகாப்பு பற்றிய கவனத்தில் சிறிது குறைவு ஏற்பட்டாலும் கூட விபரீதமான முடிவுகளைச் சந்திக்க நேர்ந்து விடுகிறது என்பது யதார்த்தம். எனினும் பாதுகாப்பு உணர்வு தருகின்ற பயத்தின் காரணமாக பதவிப் பொறுப்புக்களில் இருப்பவர்கள் தத்தம் கடமைகளை நிறைவேற்றுவதில் பின்நிற்பது மக்களுக்கு நன்மை தருவதாக இருக்க முடியாது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரையில் விடுதலை விரும்பிகளின் பெயராலும், நலன் விரும்பிகளின் பெயராலும் எழுதப்படும் கொலை மிரட்டல் கடிதங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி பல்கலைக்கழக துணைவேந்தர் முதல் அரசாங்க அதிபர், நீதிபதிகள் வரை சகலரையும் அச்சுறுத்துவதாக உள்ளது.

சரோஜினி, நமசிவாயம் போன்றோரின் படுகொலைச் சம்பவங்களையடுத்து வரும் இத்தகைய மிரட்டல் கடிதங்கள் அர்த்தமற்றவை என்று உதாசீனப்படுத்திவிட முடியாதவைதான். எனினும் இத்தகைய மிரட்டல்களுக்குப் பணிந்தும், பயந்தும் கடமைப் பொறுப்புக்களிலிருந்து நழுவி விலகிச் செல்வது சரியான விளைவுகளைத் தருமா என்பது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டியதாகும்.

சிறீலங்காவுடனான அரசியல் பொருளாதார உறவுகளை துண்டித்து தனிநாடு ஒன்றை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் பரவலாகச் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் ஆயுதம் ஏந்திய போராளிகளின் கட்டளைகள் நிறைவேற்றப்பட்டமை பொருத்தப்பாடானதாக இருக்கலாம். ஆனால்இப்போது நிவாரணங்களையும், புனர்வாழ்வையும், புனரமைப்பையும், அபிவிருத்தியையும் சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து முற்றுமுழுதாக எதிர்பார்க்கும் நிலையில் தனிநாட்டுக்கான போராட்டத்திற்கு கொள்கை ரீதியான ஆதரவு காட்டுவது ஒருவகையில் இரட்டை வேடமாகவே இருக்கும். மக்கள் மத்தியில் இத்தகைய இரட்டை வேடப் போக்கு நீடிக்கும் வரையில் அமைதியும், சமாதானமும் கானல்நீராகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பதவிப் பொறுப்புக்களில் அமர்ந்திருக்கும் அதிகாரிகள் அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கப்பால் அரசாங்கத்தின் செயற்திட்டங்களை முன்னெடுக்க முற்பட வேண்டும். அப்படியில்லையெனின் என்ன நடக்கக்கூடும் என்பதற்கு யாழ் மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்ட முறை நல்லதொரு படிப்பினையாக இருக்கலாம்.

உள்ளூராட்சித்தேர்தல்கள் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்டதும் வழமைக்கு மாறாக யாழ் மாவட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகள் பின்வாங்கி ஒதுங்கிக்கொள்ள முற்பட்டமையால் தென்னிலங்கையிலிருந்து வந்தவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப உள்ளூர் உத்தியோகத்தர் செயற்பட்டவிதம் தமிழர்களின் தன்மானத்திற்கு அழகானதாக இருந்திருக்கவில்லை.

நீதிமன்றங்களும், நீதிபதிகளும் கூட இப்போது அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர். அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் சுய பாதுகாப்பு என்ற கோணத்திலிருந்து மட்டும் அணுகாமல் சமூகப் பொறுப்புணர்வுடனும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எழுபதுகளின் இறுதிப்பகுதிக்கு பின்னர்தான் அரசாங்க அதிபர்கள் மற்றும் உயர் பதவிகளில் தமிழர்கள் நியமனம் பெற்றனர். இத்தகைய உயர் பதவிகளில் இருப்பவர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து அகற்றுவதால் தாம் விரும்பும் பயனைப் பெற முடியாது என்பதை அச்சுறுத்துபவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக புங்குடுதீவில் பெற்றோல் நிலையம் திறக்கப்பட வேண்டுமெனக் கொடுக்கப்பட்ட அழுத்தம் பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைவர் சிவஞானம் பதவியிலிருந்து அகல வழிவகுத்ததே தவிர உரியபயனை விளைவிக்கவில்லை என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோலத்தான் இலங்கையில் பிறபகுதிகளிலும், வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய பிரதேசங்களிலும் பிரதேசசபைகள் செயற்படுவது போல யாழ்மாவட்டத்திலும் செயற்பட வழிவகுப்பதன் மூலமே மக்களின் நாளாந்த வாழ்விற்கான சில அடிப்படை வசதிகளை உருவாக்க முடியும். பிரதேச சபைகளின் செயற்பாட்டிற்கு முட்டுக்கட்டை போட்டபடி புனரமைப்பு, புனர்வாழ்வு, அபிவிருத்தி பற்றி கற்பனை பண்ணுவதும் கனவு காண்பதும் எந்த விதத்திலும் பொருத்தமுடையதாகாது.

வவுனியாவிலும், திருமலையிலும், மட்டக்களப்பிலும் உள்ளூராட்சி சபைகள் செயற்படுவது போல யாழ் மாவட்டத்திலும் உள்ளூராட்சி சபைகள் செயற்படும் நிலமையை உருவாகுவதற்கு மக்கள் மிகவும் தீர்க்கமான ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டியது அவசிய அவசரத்தேவையாகும்.

அதாவது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தனிநாடு அமைப்பது மட்டும்தான் தீர்வு, அதற்காகப் போராடுவது நியாயமானது, இன்று நடக்கும் போராட்டம் அதற்கான திசைவழியில் சென்று கொண்டிருக்கின்றது, இதன் மூலம் நாம் தனிநாட்டைப் பெற்றுவிடுவோம் என்று கருதினால், சிறீலங்கா அரசாங்கத்திடமிருந்து எந்தத் துரும்பையும் எதிர்பாராமல் போராட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட மக்கள் உதவவேண்டும். அப்படிச் செய்யும் போது ஏற்படக்கூடிய உயிரிழப்பு, மற்றும் சொத்திழப்பு பற்றி யாரும் அலட்டிக்கொள்ளக் கூடாது. அத்துடன் அரசாங்கப்பதவி நாற்காலிகளில் இருப்பவர்கள் அவற்றை தூக்கி எறிய தம்மை தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

அதில்லாமல் போராட்டம் பிழையான திசைவழியில் போகின்றது, தனிநாடு என்பது சாத்தியமற்றது, யுத்தமும் அதனால் ஏற்படும் அழிவுகளும் அநாவசியமானவை, ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வொன்று காணப்பட வேண்டும் எனில், யுத்தவாதிகளை எதிர்க்க வேண்டுமென்பதுடன், தமிழ் மக்களைக் கௌரவப்படுத்தக்கூடிய தீர்வொன்றை ஏற்படுத்த முயற்சிப்பவர்களைப் பலப்படுத்தவேண்டும்.

ஜனநாயக அரசியல் சக்திகளை துரோகிகள், காட்டிக் கொடுப்போர் என்ற கருத்துணர்வுடன் பார்க்கும் அதேசமயம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை அவர்கள் பிரதிபலிக்க வேண்டுமென எதிர்பார்ப்பது பொருத்தமானதாக இருக்காது என்றே கருதலாம். அத்துடன் ஜனநாயக அரசியல் அரங்கில் பதவிப் பொறுப்பில் இருப்பவர்கள் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படையாகப் பேசி மக்களுக்கு தமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தவேண்டும். அது இல்லாதவிடத்து யுத்தம் சரியானதென்பதை அவர்களும் நியாயப்படுத்துவதாகவே மக்கள் கருதிக்கொள்ளக்கூடும்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதிய கண்ணோட்டம் வரவேற்கிறது. அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

Post Bag: 1041,
Madras-17,
India.

E.P.I.C., Box No: 95,
95144, GargesLes,
Gonnesse Cedex,
France.

P.Fach: 66,
59514 Welver,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

பள்ளிமுனை வீதி,
உப்புக்குளம்.
மன்னார்.
☎ 023-2370

54. மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

310. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021-2022

29A. வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-22398

22. வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-22724

**மின் அஞ்சல் முகவரிகள் (E-mail Address):**

epic-sl@slt.lk - Colombo
csorg@slt.lk - Jaffna
epiclondon @gn.apc.org - London
editor@epicnews.com - Canada
epic-g@t-online.de - Germany

**எமது மின் இணைய முகவரி (Web site Address):**
http://www.epicnews.com

புதிய கண்ணோட்டம்

இனிய தமிழ் மக்களே!...

# வட-கிழக்கு இணைப்பிற்கு அத்திவாரம் இடுவோம்!



அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே!

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1987ம் ஆண்டு ஜூலை 27ம் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் என ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி காலஞ்சென்ற ஜே. ஆர்.ஜெயவர்த்தனா அவர்களுக்கும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற ராஜீவ் காந்திக்கும் இடையில் இவ்வொப்பந்தம் கைச்சாத்தானது.

இவ்ஒப்பந்தத்தின் அடிப்படையில் மகாணசபைகள் சட்ட மூலமும்,அதற்கானஅதிகாரங்களை வரையறை செய்யவென 13வது திருத்தச் சட்டமூலமும் உருவாக்கப்பட்டது. இதனடிப்படையில் வட-கிழக்கிணைந்த ஓர் மாகாணமும்(தற்காலிகமாக) ஏனைய ஏழு மாகாணங்களுமாக மொத்தமாக 8 மாகாணசபைகள் அமைக்கப்பட்டன.

ஆனால் இந்திய அமைதி காக்கும் படைக்கும், புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தினால் வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களுக்கும், மாகாணசபைத் தேர்தல் நடாத்தபட்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. பின்னர், ஒவ்வொரு 5 வருடங்களுக்கு ஒருமுறை அங்கு தேர்தல்கள் நடாத்தப்பட்டு மாகாணசபைகள் தெரிவுசெய்யப்பட்டுவருகின்றன.

ஆனால், இனப்பிரச்சினைக்குத் தீர்வாகவே இவ்வொப்பந்தம், சட்டங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டும் கூட வட-கிழக்குத் தேர்தல்கள் நடாத்தாமல் பின்போடப்பட்டே போய்க் கொண்டிருக்கின்றன.

இந்திய அமைதிப்படைக்கும், புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஈ.பி. ஆர்.எல்.எவ். இன் விடாமுயற்சியால் 1989 இல் முதன்முதலாக இணைந்த வடக்குகிழக்கு மாகாணத்திற்கு தேர்தல் நடாத்தப்பட்டு, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிலான மாகாண அரசொன்று உருவாக்கப்பட்டது.

ஆனால் பின்னர் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க 1990 இல் அம் மாகாணசபை கலைக்கப்பட்டது.

அதன் பின்னர் யுத்தத்தைக் காரணம் காட்டியே வட-கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பின்தள்ளப்பட்டுப் போய்க்கொண்டிருக்கின்றது. இதனால் 1990 இல் இருந்து 98வரை தமிழ்மக்களுக்கான ஓர் மாகாண அரசு இல்லாத நிலைமையே தொடர்ந்தும் இருந்து வருகின்றது.




1989 இல் முதன்முதலாக இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு தேர்தல் நடாத்தப்பட்டு, ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைமையிலான மாகாண அரசொன்று உருவாக்கப்பட்டது.

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

மாறிமாறி வரும் அரசாங்கங்கள் வட-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை முன்வைக்க விரும்பவில்லையே தவிர, தமது தேவைகட்காக அதாவது, வட-கிழக்கில் அமைதி திரும்பி விட்டது, ஜனநாயகம் வந்துவிட்டது போன்ற பொய்களையும் மாயைகளையும் உருவாக்குவதற்காக அவ்வப்போ உள்ளூராட்சித்தேர்தல்களை நடாத்தியது.

1993 இல் கிழக்கு மாகாணத்திற்கும், வவுனியாவிற்கும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தியது. 1998 ஜனவரியில் யாழ் குடாநாட்டிற்கான உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்தியது. அதுமாத்திரமல்ல, தீவுப்பகுதியில் மாத்திரம் தேர்தலை நடாத்தி யு.என்.பி. அரசாங்கம் 10 பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கியது.

அதுமட்டுமல்ல, ஜனாதிபதித் தேர்தலும் கூட நடந்தது. இவையெல்லாம் நடைபெற முடியுமாயின் மாகாணசபைத் தேர்தல்கள் ஏன் நடைபெறக் கூடாது?

அன்பிற்கினிய தமிழ் மக்களே!

1989 இல் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் விடாப்பிடியான போராட்டத்தாலேயே அன்று மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டது. அப்படி நடாத்தப்பட்டதால்தான் வட-கிழக்கு இணைந்த மாகாணசபை ஒன்று உருவாக்கப்பட்டதுடன் இன்றுவரை வடக்கு கிழக்கு தற்காலிகமாகவேனும் இணைந்துள்ளது. இல்லையேல் வடக்கும் கிழக்கும் இன்றும் இரு மாகாணங்களாகவே இருக்கும்.

ஆனால் இன்றைய அரசாங்கத்தின் திட்டப்படி கிழக்கு மாகாணத்தையே மூன்று துண்டுகளாகப் பிரிப்பதற்கான ஓர் முயற்சியையே மேற்கொண்டு வருகின்றது. அம்பாறைத் தேர்தல் தொகுதி சிங்கள மாகாணமாகவும், பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை, தேர்தல் தொகுதிகள் இன்னொரு மாகாணமாகவும், திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்கள் மற்றொரு மாகாணமாகவும் ஆக்குவது என்ற போக்கிலேயே அரசு செயற்பட்டு வருகின்றது.

இதற்கு ஆதரவாக சிறீலங்கா முஸ்லீம் காங்கிரசும் ஒத்துழைப்பாகச் செயற்பட்டு வருகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதுதொடர்பாக முஸ்லீம் காங்கிரசுடன் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளதாகக் கூறிக் கொள்கின்றது.

இச் சூழ்நிலையில் வட-கிழக்கு இணைந்த மாகாணத்திற்கு தேர்தல் நடக்குமாயின் வட-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்படுவது சுலபமாகிவிடும். எனவே இதனை நடாத்தக் கூடாது என்பதில் அரசாங்கம் தெளிவாக இருக்கின்றது.

எனவேதான் வட-கிழக்கு இணைப்பு நிரந்தரமாக்கப்பட வேண்டுமாயின், வட-கிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் நடாத்தப்பட்டு, வட-கிழக்கு நிர்வாகம் சீரிய முறையில் நடைபெறுவதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். இதன் மூலமே, வட-கிழக்கு இணைப்பை நாம் சாத்தியமாக்கலாம்.

அதுமட்டுமின்றி,வட-கிழக்கு நிர்வாகத்தை மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் பொறுப்பேற்கும்போதுதான், நிர்வாகத்தை இராணுவத்திடமிருந்து நாம் சுவீகரித்துக்கொள்ள முடியும். உறுதியான சிவில் நிர்வாகம் உருவாகுமாயின், இராணுவ நடவடிக்கைகள் குறையும். வட-கிழக்கு போக்குவரத்து, அகதி வாழ்க்கை, புனர்நிர்மாணம் போன்ற பல விடயங்களை மாகாணசபை செய்யமுடியும்; அதாவது மக்களின் முக்கிய பிரச்சினைகளை யாவது தீர்க்க முடியும்.

அன்பார்ந்த மக்களே!

இன்றைய சூழலில் சிவில் நிர்வாகத்தைக் கையேற்கவும், வட-கிழக்கு இணைப்பிற்கான அத்திவாரத்தை பலமாக இடுவதற்குமான ஓர் தேவையை ஒட்டியே இம் மாகாணசபைத் தேர்தலை வைக்கும்படி நாம் வற்புறுத்துகின்றோமே தவிர, தேர்தல்தான் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வல்ல.

ஆனால் உருவாகும் மாகாணசபையானது முழுமையான அதிகாரங்களைக் கொண்ட ஓர் சுயாட்சி சபைக்குத் தொடர்ந்து போராடவேண்டும் என்பதையும் நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இப்படிக்கு,
உங்கள் சுரேஷ்.

# சமுர்த்தி வேலைவாய்ப்பு



சந்திரிகா அரசு பதவிக்கு வந்தபின் பல திட்டங்களைக் கொண்டுவந்து பலருக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கியதாக வானொலி பத்திரிகைகள் ஊடாக கூறிவருவது நாம் அனைவரும் அறிந்த தொன்றாகும். அத்திட்டங்களில் ஒன்றுதான் சமுர்த்தித் திட்டமாகும். இலங்கையில் பல பாகங்களிலும் 33ஆயிரம் பேர் வரை அரசியல் கட்சிகளின் உதவியுடன் படித்த இளைஞர்கள் யுவதிகளை சமுர்த்தி வேலைக்கென திரட்டியது.


வடகிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இத்திட்டத்தை உடன் அமுல்படுத்தியது. வடகிழக்கில் பல இழுத்தடிப்புகளுக்குப் பின் சில இடங்களில் இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன் இத்திட்டத்தை அமுல்படுத்தியது. ஒரு (ஜீ.எஸ்.) கிராமசேவகர் பிரிவில் மூன்று பேர் இவ் வேலைக்கென சேர்த்துக் கொள்ளப்பட்டு அந்தந்த கிராமசேவகர் பிரிவுகளில் மக்களின் புள்ளிவிபரங்கள் திரட்டப்படுகின் றன. இதுவே இவர்களின் வேலையாகவும் உள்ளது. மாதாந்தச் சம்பளம் 2000 ரூபா மட்டில் வழங்கப்படுகிறது.

ஆனால் வடகிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவ் வேலைவாய்ப்புக்களை அரசு வழங்கவில்லை என்பது மிகவும் வேதனையோடு குறிப்பிடத்தக்கது. புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளவை என்று கருதும் பகுதிகளிலும் அரச நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அப்படியிருக்க, ஏன் இப்பகுதிகளில் இப்படியான வேலைவாய்ப்புக்களை வழங்கவில்லை? இப்பகுதிகளில் படித்த இளைஞர் யுவதிகள் இல்லை என்று அரசு கருதுகின்றதா?

மிகவும் கொடூரமான ஷெல் வீச்சுக்கள், குண்டுமழைகள் பொழியும் போர்ச் சூழலிலும், பெரும் கஷ்டங்கள் வேதனைகளுக்கு மத்தியிலும் தாய் தகப்பன் தமது வாய் வயிறைக் கட்டியாவது பிள்ளைகளின் எதிர்காலம் நல்லவையாக அமையவேண்டுமென்பதற்காக அவர்களை படிப்பிக்கின்றார்கள். படித்து முடித்தும் இங்குள்ள இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புக்கள் இல்லாமலும், தமது சொந்தத் தொழில்களைக் கூட செய்ய முடியாமல் குடும்பங்கள் சீரழிந்து அவர்களின் வாழ்க்கை சின்னா பின்னமாகிறது. இப்படியான நிலைமைகளை புரிந்து கொள்ளாமல் அரசு பாராமுகம் காட்டுவது இனரீதியான ஒடுக்குமுறை என எண்ண வைப்பது மட்டுமில்லாமல் அரசாங்கமே இவ் இளைஞர்களை புலிகளின் போர்முனைக்கு அனுப்பி வைப்பதாக அமைகின்றது.

இதே சமுர்த்தித் திட்டத்தில் மன்னார் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளிலும் தமிழ் கட்சிகளின் உதவியுடன் ஏறக்குறைய 250பேர் அளவில் 30கிராமசேவகர் பிரிவுகளுக்கு விண்ணப்பித்திருந்தனர். சமுர்த்தி ஆணையாளருக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டு, அதனைப் பரிசீலித்து அதற்குத் தகுதியானவர்களின் விபரப் பட்டியல் மன்னார் பிரதேச செயலாளர் அவர்களால் மீண்டும் சமுர்த்தி ஆணையளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது ஏறக்குறைய ஒன்றரை வருடங்களுக்கு முன் நடைபெற்றது. அதன்பின் இராணுவ நகரகொமாண்டர் அலுவலகத்திலும் விண்ணப்பதாரரின் தகுதிகள் ஆராயப்பட்டது. இராணுவத்தினர் நடத்திய இத்தகுதிப் பரீட்சைகள் அரசாங்க அதிபருக்கோ பிரதேச செயலாளருக்கோ அறிவிக்காமல் தன்னிச்சையாக நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இதுவரை சமுர்த்திக்கு விண்ணப்பித்த மன்னார் விண்ணப்பதாரர்களின் நிலைமைகள் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. வேறு சில மாவட்டங்களில் சமுர்த்தி அமுல்படுத்தப்பட்டு வேலை நிரந்தரமாக்கப்படவேண்டும் எனவும், ஊதியம் அதிகரித்து தரப்படவேண்டும் எனவும் கோரிக்கைகள் வைத்து அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளின் உதவியுடன் உண்ணாவிரதம் ஊர்வலம் போராட்டங்கள் என்பன நடத்தப்படுகின்றது. இந்த நிலவரங்களை அரசுக்கு எடுத்துரைக்கவே இந்த மக்களால் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டவர்களுக்கு கை கால் ஆகாத நிலையே நீடிக்கிறது.

மன்னாரில் இருந்து சிறைச்சாலை ஊழியர்களுக்கென 24இளைஞர்கள் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு 9பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். ஆனால் இன்னும் அவர்களுக்கான வேலைகள் வழங்கப்படவில்லை. ஏனைய மாவட்டங்களில் தெரிவானவர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இப்படியாக இங்கு பல வேலைவாய்ப்புக்கள் இருந்தும் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு எமது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாதியில்லை. ஆகவே இனியாவது, நாமே இணைந்து எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்போம், பாடுபடுவோம். அதுவே நமக்குள்ள வழி.



ச. ரெட்ணசிங்கம்
(குமரேஷ்)
பிராந்திய செயலாளர்
ஈ.பி.ஆர்.எல்.எவ்.
மன்னார் மாவட்டம்.

www.padippakam.com



# இலங்கை செஞ்சிலுவை சங்க வாகனம் எதற்கு?

மக்களுக்குச் சேவை செய்ய மீண்டும் புனரமைக்கப்பட்ட இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மன்னார்க் கிளை தனது பணிகளை மன்னார் தீவிலும் பெருநிலப்பரப்பிலும்செய்து வருகின்றது.

போதியளவு நிதி இல்லாத பொழுதும் இச்சங்கத்திடம் ஒரு அம்புலன்ஸ் வண்டி, 2 பிக்கப் வாகனம், ஒரு லாண்ட் குரூசர், ஒரு மோட்டார் சைக்கிள் ஆகியன தற்சமயம் உண்டு. இதில் அம்புலன்ஸ் வண்டி மாத்திரம் பொதுமக்களின் பாவனைக்காக நோயாளர்கள் இறக்கும் பட்சத்தில் அவர்களின் உடலை ஏற்றிச் செல்லப் பயன்படுத்தப்படுகின்றது.

அம்புலன்ஸ் வாகனம் தற்பொழுது சங்கத்தலைவரின் வீட்டில் உள்ளது. இந்த வாகனம் இறந்த உடல்களை எடுத்துச் செல்லுவதற்கு 3500 தொடக்கம் 10-17ஆயிரம் வரை வாடகை அறவிடப்படுகின்றது. ஒன்றும் இல்லாது அனாதைகளாக ஆஸ்பத்திரியில் இறக்கும் நோயாளிகளிடமும் இதே தொகை அறவிடப்படுகின்றது.

ஆனால் அண்மைய தகவல்களின்படி பிக்கப்வாகனம் தலைவரது சமயாசமய வேலைகளுக்காக தள்ளாடி பகுதிக்கு வந்து போவதாக அறியப்படுகின்றது. ஏழைகளின் உடலை ஏற்றிச் செல்ல கட்டாயமாக பணம் அறவிடும் செஞ்சிலுவைச் சங்கம் ஏன் தலைவரினது தனிப்பட்ட தேவைகளுக்குச் சங்க வாகனம் பாவிக்கப்படுவதை பார்த்துக் கொண்டு இருக்கின்றது.

வாகன பராமரிப்புக்கு பணம் இல்லை என்று கூறும் நிர்வாகம், தலைவர் மடு பகுதியில் பிக்கப் வாகனத்தைக் கொண்டுசெல்கையில் அடிபட்டபோது, அதனைத் திருத்துவதற்கு எந்தப் பணத்தை செலவழிக்கின்றது என்று கூறுமா?

பொது தொண்டர் ஸ்தாபனமாக கருதப்படும் இலங்கை செஞ்சிலுவை சங்கம் பொது மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு பணத்தை ஏழைகளிடம் எதிர்பார்க்கக் கூடாது. இறந்த உடல்களை அனுப்புவதற்கு பிக்கப் வாகனத்தை பயன்படுத்தலாம்.



First Aid Camp

பெருநிலப்பரப்பில் எத்தனையோ நோயாளிகள் கஷ்டப்படுகின்றார்கள்.வைத்தியர்களின்அனுமதிப் பத்திரத்தோடு, இராணுவ கட்டுப்பாடற்ற இடத்தில் உள்ள நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்கு உதவியாக அம்புலன்ஸ் வாகனத்தை மடுவில் நிறுத்தி வைக்கலாம். இதன்மூலம் அவர்களுக்கு இலவச போக்குவரத்தை வழங்கலாம்.

இலவசப் போக்குவரத்தை வழங்க சர்வதேச செஞ்சிலுவை சங்கம் உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது. இந்த சங்கத்தின் தலைவர் அண்மையில் மடு சென்று அங்கிருந்து பெரியமடு வழியாக கள்ளியடி சென்ற பொழுது இந்த வாகனம் அங்குள்ள இயக்கத் தலைவர்கள் பாவிப்பதற்கு தலைவர் கொடுத்திருக்கிறார். பொது வாகனங்களை அவ்வாறு பாவிக்கக் கொடுப்பதால் மன்னார்த் தீவில் இருந்து பெருநிலப்பரப்புக்கு நோயாளிகளைக் கொண்டு செல்ல இராணுவத்தால் சில வேளைகளில் அனுமதி மறுக்கப்படலாம். இதனால் பொதுமக்களுக்கே நஷ்டமும் கஷ்டமும் ஏற்படும்.

சங்கத்தின் இங்குள்ள தலைவருக்கோ அல்லது பிரதிநிதிகள் உறுப்பினர்களுக்கோ சேவை செய்யும் நோக்கமும் சிந்தனையும் இல்லை. அண்மையில் கூட ஒரு குருவானவர்ஆஸ்பத்திரியில் மக்களுக்கு சேவை செய்கின்றவர் ஸ்கந்தபுரத்திலிருந்து கொழும்பு போவதற்காக மன்னார் வந்து சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் இறந்துபோன ஒரு 48வயது மதிக்கத்தக்க பெண்ணின்உடலை ஸ்கந்தபுரம்அனுப்புவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்துக்குச் சென்று வாகன ஒழுங்கு செய்து தரும்படி கேட்டிருக்கின்றார். அவர்கள் தள்ளாடி பிரிகேடியரிடம், கட்டுப்பாடற்ற பகுதிக்குக் கொண்டுசெல்ல அனுமதி எடுத்து தரும்படி அங்கிருந்த A.O. கேட்டிருக்கின்றார்.அந்த குருவானவர்மறுநாள் தள்ளாடி சென்று விசேஷ அனுமதிப்பத்திரம் பெற்றுவந்த பொழுது, நீங்கள் திருவாளர் இராமகிருஷ்ணனை சந்தித்து அனுமதி எடுக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

குருவானவர் திரு. இராமகிருஷ்ணனைத்தேடிஅவர் வேலை செய்யும் R.D.A. அலுவலகத்திற்குப்போனார். அவர்அங்கு இல்லை. திரும்பவும் செஞ்சிலுவை சங்கத்துக்கு சென்று அவரை காணவில்லை என்று கூறியிருக்கிறார். பின்னர் அவர் M.A.R.R.O. அலுவலகத்தில்இருக்கிறார் என்றார்கள். அங்குஅவரைத் தேடிப் போனார். அங்கும் இல்லை. வீட்டில் என்றார்கள், வீட்டுக்கும் குருவானவர் சென்றார். அங்கில்லை. U.N.H.C.R.அலுவலகத்தில் இருப்பார் என்றார்கள் அங்கும் சென்றார்... இல்லை. இவ்வாறு 2 மணித்தியாலங்கள் அவரைத் தேடியபின் 12.30 மணியளவில் திருவாளர் இராமகிருஷ்ணனை சந்தித்தபொழுது'நாங்கள் Letter Headல்தான் அனுமதி வாங்க வேண்டும், உமது விசேஷ பாஸ் செல்லாது' என்றார்கள்.

பின்பு குருவானவர் அவர்களது அனுமதிப் பத்திரத்தை தள்ளாடிக்கு கொண்டுபோய் கேட்டபொழுது, இல்லை ஏற்கனவே எடுத்த அனுமதி போதும் என்றனர். ஒருவாறு அன்று அந்த இறந்த பெண்மணியின் உடல் ஸ்கந்தபுரம் சென்றடைந்தது. இந்த பிரேதம் மடுவால் போகும் போது செஞ்சிலுவைசங்க தலைவர் மடு கிளையிலிருந்து தனது மடு கிளை உறுப்பினர்களுக்கு கூறியிருக்கிறார், "பார்த்தீர்களா நான் இங்கிருக்க எப்படி எமது வாகனம் சேவையில் ஈடுபடுகின்றது.வாகனத்துக்கு தள்ளாடியில் அனுமதி பெற்று சகல ஏற்பாடுகளையும் செய்ய மன்னார் A.O. ஒருவரை நியமித்துள்ளேன்,அவரது முயற்சிதான் இது" என்று சொல்லி உறுப்பினர்களின் பாராட்டைப் பெற்றார்.

இத்தனைக்கும்இது மன்னார் ஆஸ்பத்திரியில் நோயாளர்களின் தேவையே தனது சேவையாக பணியாக வாழுகின்ற, பொம்பர் குண்டு வீச்சால் இரண்டு கால்களையும் இழந்த குருவானவரின் முயற்சிஎன்பதை கூறவேண்டும்.

மன்னார் செஞ்சிலுவைச் சங்கம் மக்களுக்கு உரிய முறையில் சேவை செய்ய வேண்டும். இல்லையேல், தாம் பதவி விலகி சேவைமனப்பான்மை உள்ளவர்களை பணிசெய்ய அனுமதிக்க வேண்டும்.

*ஸ்கந்தபுரம்*
*கே. கண்ணன்*




## வியாபார தர்மம், அற்புதம் தம்பி!

கடந்த 14-05-98 அன்று அக்கரைப்பற்று பள்ளி வாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த பொலீஸ்காரர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். 'வீதியில் நின்றவரைத்தான் புலிகள் சுட முயன்றனர். ஆனால் அப்பொலீஸ்காரர் பள்ளிவாசலுக்குள் தஞ்சமடைய ஓடினார். ஆகவேதான் புலிகள் பள்ளிவாசலுக்குள் நுழைந்து சுடவேண்டி ஏற்பட்டது' என புலிகளின் நடவடிக்கைகளுக்கு ஓர் சப்பைக்கட்டு நியாயத்தை தினமுரசு பத்திரிகையின் ஆசிரியரும் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினருமான அற்புதராசா நடராசா தனது தினமுரசில் முன்வைத்துள்ளார். உண்மைக்குப் புறம்பான தினமுரசின் திரிபுபடுத்தலால் கொதித்தெழுந்த அக்கரைப்பற்று மக்கள், தினமுரசு பத்திரிகையை வீதியில் போட்டு கொழுத்தினராம். அற்புதமானவரின் பத்திரிகை தர்மம் தொடரட்டும்.

## புலிகள் வைக்கும் பொறி

யாழ்ப்பாணம் குருநகரில் பெண் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரண்டு இராணுவத்தினரும், ஓர் பெண்ணும் கொல்லப்பட்டதுடன், இன்னும் சில அப்பாவிகள் காயமடைந்ததும் அறிந்ததே. இச்சம்பவத்தைத் தொடர்ந்து நூற்றுக்கு மேற்பட்ட குருநகர் மக்கள் இராணுவத்தால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டனர். பின்னர் இவர்களில் பலர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவை யாவும் முடிந்த பின்னர் யாழ் நகரக் கொமாண்டர், நடந்த துர்ப்பாக்கிய நிகழ்ச்சிக்கு மன்னிப்புக் கோரினாராம். பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகின்றாரா? அல்லது மனிதாபிமானம் பொங்கி வழிகின்றதா? இராணுவ அத்துமீறல்கள் தொடர்கிறது எனின், புலிகள் வைத்த பொறிக்குள் இராணுவத்தினர் அகப்பட்டுவிட்டனர் என்றே அர்த்தம்.

## எதிர்காலம் என்னவாகப் போகிறது?

வன்னியில் வாரந்தம் நடக்கும் எழுச்சிக் கூட்டத்தில், அரச உத்தியோகத்தர்கள் கிழி கிழியென்று கிழிக்கப்படுகின்றார்களாம். சிறுவர்கள், இளைஞர்களின் கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றை ஊக்குவித்து இவர்களை நற்பிரசைகள் ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொது ஸ்தாபனங்களின் உதவியுடன் ஒரு சில கல்விக் கூடங்களைத் தொடங்குவதற்கு இவ் அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டமை, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்க் குழுவிற்கு மிகுந்த கோபத்தை உருவாக்கியுள்ளதாம். 'மண்ணைக் காப்பாற்ற முடியாமல் இருக்கும் பொழுது கல்விக்கு இப்ப என்ன அவசரம்?' என்று அவர்கள் விசனப்படுகின்றார்களாம். வாழ்க, தமிழ் மக்களின் எதிர்காலம்.

## புதிய வருமானம்

வன்னியில் 1500 ரூபா விற்ற பெற்றோல், இந்திய எண்ணெயின் வருகையால் கிடுகிடுவென விலை சரிந்து விட்டதாம். தற்பொழுது 400ரூபாவிற்கு பெற்றோல் விற்கப்படுவதாகவும் இன்னும் பல இந்தியப் பொருட்களும் வன்னி மார்க்கட்டில் இருப்பதாகவும் அறியப்படுகின்றது. இந்திய மீனவர்களுக்கு மீன்பிடியிலும் விட இக்கள்ளக் கடத்தலால் அதிக இலாபம் சம்பாதிக்கக் கூடியதாக உள்ளதாம்.

## ஒரே கல்லு பழம் இரண்டு!

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கும்பாபிஷேகத்தின் போது புலிகளின் தாக்குதல்கள் வீடியோ கஸற்றில் காண்பிக்கப்பட்டதாம். இதனைத் தொடர்ந்து கோயிலுக்குச் சென்ற 250க்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மிஸ்ஸிங் என அறியப்படுகின்றது. இக் கோவில் திருவிழாவில் கோடிக்கணக்கான ரூபாக்கள் வருடாந்தம் சேர்வதாகவும் அதனைக் குறி வைத்தே 15 வருடம் நடக்காமல் இருந்த திருவிழாவை நடத்தும்படி வற்புறுத்தப்பட்டதாம். சபாஷ்! ஒரே கல்லில் இரண்டு பழங்கள்.

## சந்திரிகாவுக்கும் 'சல்லிய சாரத்தியம்'

பொதுஜன முன்னணியில் ஜனாதிபதி சந்திரிகா மாத்திரமே மக்கள்மத்தியில் பிரபல்யம்பெற்ற தலைவராக இருப்பதாகவும், ஏனைய அமைச்சர்களுக்கோ, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ எந்தவித செல்வாக்கும் இல்லை எனவும், எனவே மாகாணசபைத் தேர்தலுக்கு முன் ஜனாதிபதித் தேர்தலை நடாத்தினால் பொதுஜன முன்னணி மிகப் பெரும்பான்மை வாக்குகளுடன் வெல்லுமெனவும், அந்த அலையுடன் மாகாணசபைத் தேர்தலை நடாத்தினால் அதையும் வெல்ல முடியும் எனவும் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாம். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 2வருடம் இருக்கையில், அதைக் கலைத்து மீண்டும் தேர்தலுக்குப் போவதை ஜனாதிபதி விரும்பவில்லையாம். ஜனாதிபதியை இப்பொழுதே வீட்டுக்கனுப்ப உள்ளிருந்தே ஆலோசனை எனவும் பேசப்படுகின்றது.

## கூட்டணியிடம் புலிகளுக்கு அன்பாம்! கொலைகள் செய்வது யாரோவாம்!

யாழ் மாநகர கதிரையின் மேற்கொண்ட காதல், சிவமானவரை கண்டபடி உளறவைக்கின்றதாம். போராளிகளுக்கு, தான் எதிரியில்லையாம். சரோஜினி கொலைக்கும் போராளிகளுக்கும் சம்பந்தமிருப்பதாய் தான் உணரவில்லையாம். யாழில் இருக்கும் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையே சரோஜினியின் கொலைக்கு காரணமாக இருக்கலாமாம். தலைவர் அமிரின் கொலைக்கும் புலிகளுக்கும் சம்பந்தமில்லை என்றவர்கள், சரோஜினியின் கொலைக்கு மாத்திரம் எப்படி அவர்களை சம்பந்தப்படுத்துவார்கள்? வாழ்க, கூட்டணியின் ஜனநாயகம்! வாழ்க அவர்களின் துணிச்சல்!

www.padippakam.com





பத்மநாபா



சிறீசபாரட்ணம்



ரஜனி திரானகம



அமிர்தலிங்கம்



யோகேஸ்வரன்



தங்கத்துரை

# பாசிஸ இருள் மூடுவதைப் பார்த்துக்கொண்டிருப்போமா?

யாழ்ப்பாண மேயர் சரோஜினி யோகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டு வாரங்கள் உருண்டோடிக்கொண்டிருக்கின்றன.

அவரது படுகொலைக்கு ‘சங்கிலியன் படை’ என்ற அமைப்பு ஒன்று உரிமை கோரி, பின் மறுத்துள்ளது. அதேசமயம் கொலையை யார் செய்திருந்தாலும் தாம் பாராட்டுவதாக அறிக்கை வேறு விடுத்துள்ளது.

இந்தக் கொலை பற்றி, இதை புலிகள் செய்யவில்லை என்று பல்வேறு ஊகங்கள், வாதப்பிரதிவாதங்கள் கிளப்பப்படுகின்றன.

எது எப்படியோ... இரத்தம் தோய்ந்த ஜனநாயக மறுப்பு பயங்கரவாத அரசியலின் மிகக் கிட்டிய உதாரணம்தான் மேயரின் படுகொலை.

இந்தப்படுகொலை மக்களின் ஜனநாயகத்தின் மீதான் ஆர்வத்தின்மீது தொடுக்கப்பட்ட பாரதூரமான தாக்குதல் ஆகும்.

மக்களின் சமகால அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் வகையில் யாரும் தலைவர்களாக உருவாகிவிடக் கூடாது என்பதனை அவதானத்துக்கு எடுத்துச் செய்யப்பட்டதாகும்.

அத்தோடு இது மக்களுக்கு ஒரு எச்சரிக்கையுமாகும். தம்மைத்தவிர வேறுயாரிடமும் செல்லக்கூடாது என்பதேஅது. மெதுவாக அடக்குமுறை இருளிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த மக்களை திரும்பவும் இருட்டில் தள்ளும் வேலையுமாகும்.

புலிகளுக்கு மாறான எந்த அபிப்பிராயமும் மேல்கிளம்புவதைத் தடைசெய்வதில் அவர்கள் எச்சரிக்கையாக இருக்கின்றார்கள். அதற்குக் கருத்துக்களை அல்ல அவர்கள் நம்புவது, கருவிகளை.

சமூகத்தில் இயல்பாக, ஆக்கபூர்வமாக சிந்திக்கும் எவருக்கும் இங்கு வாய்ப்பூட்டுச் சட்டம் போடப்படுகிறது. அவ்வாறு அவர்கள் சிந்தித்தால் மரணம் என்று அச்சுறுத்தப்படுகிறார்கள்.

சமூகத்தை மௌனத்தில் உறைந்து போகவைக்கும் இக்கொலை தொடர்பாக மென்று விழுங்கியபடியே அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன. கொழும்பிலும், தமிழர்கள் வாழும்வேறு பிரதேசங்களிலும் இதனை புலிகள் செய்திருக்க மாட்டார்கள் என்று ஒரு அபிப்பிராயம் மேற்கிளம்பியது. அதற்கு சங்கிலியன் படையின் அறிக்கையும் உறுதுணையாக இருந்தது.

ஜ.பி.சி. சர்வதேச வானொலியில் தாஸிசியஸ் அவர்கள் சகட்டுமேனிக்கு ஏனைய தமிழ்க்கட்சிகளைச் சாடியிருந்தார். சரோஜினி படுகொலை செய்யப்பட்ட இடத்திற்கு இன்னுமொரு மேயரைத் தெரிவு செய்வதை, இன்னுமொரு பலிக்கடா உருவாக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தார்.

அதாவது புலிகள் துப்பாக்கி மூலம் ஒரு செய்தியைச் சொல்லியிருந்தால் அந்தச் செய்திக்கு விரோதமாக எதனையும் செய்து விடாதீர்கள் என்பதே அது.

புலிகளின் ஜனநாயகவிரோத சிந்தாந்த நிலைப்பாட்டினையே தமது நிலைப்பாடாக வரிந்து கொண்டவர்கள் தமது சிந்தனையில் வேறு எந்த சரிபிழைக்கும் இடமளிப்பதில்லை.

இதனையே இங்குள்ள சில தமிழ் பத்திரிகைகளும் கடைப்பிடிக்கின்றன. சரோஜினியின் மரணம் ஒரு ஜனநாயகப் படுகொலை. இங்குள்ள சில தமிழ் பத்திரிகைகள் தந்திரமாக தமது ஆசிரியர் தலையங்கத்தில் இப்படுகொலை பற்றிய நேர்மையான அபிப்பிராயத்தை வெளியிடத் தவறிவிட்டன.

பத்திரிகைகளும் ஏனைய தகவல் தொடர்பு சாதனங்களும் இத்தகைய விடயங்களில் காட்டிவ்ரும் பாரபட்சமான போக்கு, எழது சமூதாயத்தை அழிவுப் படுகுழியில் தள்ளிவிடும் நடவடிக்கையுமாகும். இதனை சில பத்திரிகைகள் அறிந்தும் இன்னும்சில பத்திரிகைகள் பிரக்ஞை அற்றும் செய்கின்றன.

இந்தப்படுகொலைகள் எமது சமூதாயத்தில் தொடர்ந்து தக்க வைக்கப்பட்டிருப்பதற்கு காரணம் தகவல் தொடர்புத்துறையில் உள்ள இத்தகைய போக்கு மாகும்.

ஒவ்வொரு படுகொலை தொடர்பாகவும் மௌனம் சாதிக்கப்படும் போது அல்லது வக்காலத்து வாங்கப்படும் போது எமது சமுதாயத்தின் உயர்ந்த கலாசார, மானிட விழுமியங்களுக்கெதிராக பாரதூரமான தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தெரிந்த வழியில் சமூகத்துக்கு சேவையாற்ற உரிமையுடையவன். அந்த உரிமையே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. யாரோ ஒருவர் முன்வரும் போது அவர் இரத்தத்தில் குளிப்பாட்டப்படுகிறார். உடல் மீதியின்றி அழிக்கப்படுகிறார். அப்படியாயின் சமூகம் எவ்வாறு வளர்ச்சியடையும்? மொண்ணையாக, தற்குறியாக எமது சமூகம் போய் விடாதா?

இன்று யுத்தசக்திகளுக்கு நடுவே முகமிழந்துபோன எமது மக்களுக்கு என்ன தேவைப்படுகிறது? அவர்களின் உயிருக்கும் வாழ்விற்கும் உத்தரவாதம் தானே!

வளங்கள் பற்றாக்குறையாக உடலாலும் உள்ளத்தாலும் பல வீனப்பட்டுப்போன எமது மக்களுக்கு மாநகர சபைகளினதும், அரசசார்பற்ற நிறுவனங்களினதும், சிவில் நிர்வாக இயந்திரத்தினதும் உதவி ஜீவாதாரமானதென்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆயுத அரசியல் பயத்தில் இருந்து விடுபடுவதும் கூட அத்தியவசியமானது.

மேற்கு நாடுகளிலும், நாட்டினுள்ளேயே பாதுகாப்பான இடங்களிலும் இருந்துகொண்டு மக்களின் தேவைபற்றி உணராமல் பொறுப்பற்ற விதத்தில் எழுதுவதோ, பேசுவதோ எந்த அளவிற்கு நியாயமாக இருக்க முடியும்?

சாதாரண மனிதனின் ஜீவாதாரமான சின்னச்சின்ன தேவைகள் பற்றி யாரும் சிந்தித்தார்களா?

துரதிர்ஷ்டம் என்னவென்றால் கொல்லப்பட்ட சரோஜினி யோகேஸ்வரன் அங்கத்துவம் வகித்த கட்சியைச் சேர்ந்தவர்களே கொன்றவர்கள் யார் என்பதுபற்றி அறிந்துகொள்ள விரும்பாதவர்கள் போல் இருக்கிறார்கள். பயம், வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு தலைமையேற்க வந்தவர்களுக்கு தார்மீக துணிச்சல் இருப்பது அவசியம்.

சரோஜினி யோகேஸ்வரன் உயிருடன் இருந்தபோது அவரிடம் அளவளாவியவர்கள், உதவிக்குச் சென்றவர்கள் அவர் துப்பாக்கிமனிதரால் கொல்லப்பட்ட பிறகுஅவருடைய உடலை நெருங்க அஞ்சினார்கள். துக்கத்தை அனுஷ்டிக்க விரும்பியவர்களுக்குக்கூட துணிச்சல் இருக்கவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் துக்கத்தை பகிரங்கமாக அனுஷ்டிக்க முன்வந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே!

ஒரு மிகமோசமான கொடூரத்தையிட்டு தமது உணர்ச்சிகளை வெளிப்படுத்தாதவர்கள் இருப்பதும், இறப்பதும் ஒன்றுதான்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், பத்மநாபா, சிறீசபாரட்ணம், தங்கத்துரை, சரோஜினி... என கொல்லப்படும் அரசியல் தலைவர்களின் படுகொலைப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது.

தவிர பரியோவான் கல்லூரி முன்னாள் அதிபர் ஆனந்தராசா, முன்னாள் அரச அதிபர் பஞ்சலிங்கம், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கந்தசாமி, முறிந்தபனை எழுதிய காலாநிதி ரஜனி திரணகம, யாழ் பல்கலைக்கழக மாணவி கவிஞர் செல்வி என இன்னுமொரு முடிவற்ற பட்டியல்.

இதேபோல் இன்னும் நூற்றுக் கணக்கான பொதுமக்களின் பட்டியல்.

இவற்றைத் தொடர்ந்து பார்த்துக்கொண்டு தமிழ் அரசியல் தலைமைத்துவம் வாளா இருக்கப்போகின்றதா? யார் செத்தால் என்ன எமது கன்னைக்குள் பிரச்சினை வராமல் இருந்தால் சரி என்று சிறுசிறு வட்டங்களுக்குள் சீவிக்கப்போகிறதா?

தமிழ்மக்களின் சுயமரியாதை கௌரவத்தை உறுதிசெய்யும் இனப்பிரச்சினைக்கான தீர்வு அவசியம்தான். அதேயளவுக்கு தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகம், மனித உரிமை பற்றிய பிரக்ஞையும் தேவைப்படுகின்றது.

அவலமாக வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் தொடர்பாக பல்வேறு நாடுகள், மனித உரிமை ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அக்கறை கொண்டுள்ளன. கடினமாகிவிட்ட வாழ்க்கை இலகுவாக்கப்படவேண்டும் என்பதில் யாருக்கும் முரண்பட்ட கருத்து இல்லை. மக்களின் விருப்பமும் அதுதான். ஆனால், அதற்கே மண் அள்ளிப்போடும் வேலை இது.

.சரோஜினியின் கொலை இப் பல்வேறு தரப்பினரையும் அதிர்ச்சியடைய வைத்தது, விசனமடைய வைத்தது. இதனால்தான் முதலில் உரிமை கொண்டாடிய சங்கிலியன்படை பின்னர் வாபஸ் பெற்றுக்கொண்டது அல்லது பழியை யார் தலையிலாவது கட்டிவிட எத்தனித்தது.

ஒரு படுபாதகமான செயலைச் செய்துவிட்டு அறிக்கைகள் மூலம் வேடிக்கை காட்டுவோரின் நெஞ்சில் ஈரத்தைப் பற்றி யாரும் நினைத்துப்பார்க்கமுடியாது.

சரோஜினியின் படுகொலை தமிழ்சமூகம் இழந்துவிட்ட பெறுமதி வாய்ந்த விடயங்கள் சிலவற்றை உணர்த்தி நிற்கிறது. அவை ஜனநாயகம், மனிதாபிமானம். இவற்றை எமதுசமூகத்தில் தக்கவைத்தாக வேண்டும்.

தமிழ் மக்களின் விடுதலை என்பது இவற்றையும் உள்ளடக்கியதாகவே இருக்கமுடியும். இவற்றையும் உள்ளடக்கிய தமிழ் மக்களின் அபிலாசைகளுக்காக மனச்சாட்சி உள்ள அனைத்து அரசியல் சக்திகளும் ஐக்கியப்பட்டுச் செயற்படவேண்டியது இன்றைய வரலாற்றின் அவசர கோரிக்கையாகும்.

இல்லாவிடில் சிறந்த ப ரிதர்கள் ஒவ்வொருவரும் இறந்து போக பாசிச இருள் மூடும் ஒரு காலகட்டத்தை கையாலாகாதவர்களாக பார்த்துக்கொண்டிருந்ததாகவே முடியும்.

எனவேதான் மரணபடுகுழிக்குள் வேகமாக சென்றுகொண்டிருக்கும் எம் மக்களின் வாழ்வை மீட்பதற்காக நாம் ஐக்கியப்பட வேண்டும். இத்தகைய படுபாதகங்களுக்கெதிராக வெகுஜன இயக்கங்களை நடத்துவது தவிர்க்க முடியாத வரலாற்றுக் கடமையுமாகும்.

- எஸ். திருநாவுக்கரசு





ஒவ்வொரு மனிதனும் தனக்குத் தெரிந்த வழியில் சமூகத்துக்கு சேவையாற்ற உரிமையுடையவன். அந்த உரிமையே கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. யாரோ ஒருவர் முன்வரும்போது அவர் இரத்தத்தில் குளிப்பாட்டப்படுகிறார்; உடல் மீதியின்றி அழிக்கப்படுகிறார்.

## அனுபவம்

ஆயுதங்கள் எங்கள்
விதியினை வரைந்தன.

ஓலைக் குடிசையையும்
இழந்துவிட்டு
ஓடி வந்தோம்.

அகதிகளாக
அணிவேர் மண்ணில்
இறங்கிக் கொண்டது.

அகதிகள் உருவாகவும்
பெருகவுமா
ஆயுதங்களின் மோதல்கள்?

- மு.குமாரி,
11, வீரபுரம், நேரியகுளம்.

படிப்பகம்



# தேவை: மக்களின் விழிப்புணர்வு எமக்குள் ஒற்றுமை அண்டை நாட்டின் ஆதரவு

ரி. சிறீதரன்



என்னதான் தமிழ்மக்கள் வரலாற்றில் அனுபவிக்காத துன்பங்களை எல்லாம் அனுபவித்தாலும் அயல் நாட்டில் அது தாக்கமானதாக எதிரொலிக்கவில்லை.

15 வருடங்களுக்கு முன்னர் ஈழத் தமிழர் படும் துன்பங்கள் பற்றி அங்கு பேசாத பத்திரிகையில்லை. இலங்கைத் தமிழர்கள் படும் துன்பங்கள் பற்றி மொழியால், கலாசாரத்தால், உணர்வால் தமிழ் நாட்டு மக்களிடையே ஒரு பெரும் கரிசனை, உளத் தாக்கம் இருந்தது.

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பிறகு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டன. ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு என்பது பிரச்சினைகளை விலைக்கு வாங்கும் விடயமென்றாகிவிட்டது.

ஆனாலும், 'புலிகளின் பிரச்சினை வேறு, ஈழத்தமிழர்களின் பிரச்சினை வேறு. ஈழத்தமிழர் பிரச்சினையில் பாரதம் தனது தார்மீகக் கடமையைத் தட்டிக் கழித்துவிட முடியாது' என பேசுபவர்கள் எழுதுபவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இந்தியாவின் ஒவ்வொரு அரசியல் மாற்றமும் தமிழ்மக்களால் மிகுந்த எதிர்பார்ப்புடன் நோக்கப்பட்டன. ஆனால், இந்திய அரசியலில் பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும் எமது பிரச்சினையில் எந்த குறிப்பிட்ட மாற்றமும் ஏற்படவில்லை.

இப்போது பாரதீய ஜனதா கட்சி பதவிக்கு வந்ததன் பின் எதிர்பார்ப்புக்கள் சற்று அதிகமாகவே இருக்கின்றன.

ஆனால், எமக்குள்ளே தீவிரமான மாற்றத்தை கொண்டு வராதவரை எதுவும் பெரிதாக நடைபெறப் போவதில்லை. ஈழத் தமிழர் பிரச்சினையில் பாரதீய ஜனதா கட்சியின் நிலைப்பாடு இதற்கு முன்னர் இருந்த ஐக்கிய முன்னணி அரசைவிட சற்று வித்தியாசமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அது ஏற்கனவே இங்கு சிலர் தெரிவிப்பது போல் புலிகளுக்கு சாதகமாக இருக்குமென்றில்லை. மக்களின் நலன்களைப் பிரதானப்படுத்தியே அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும்.

உண்மையில் அது பிரயோகிக்கப்படவேண்டியதே. ஏனெனில் இலங்கையின் அரசியல் சக்திகள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றலை இழந்திருக்கின்றன.

அரசினால் இப்பிரச்சினைக்காக முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டயோசனைகள் இன்று மரணப்படுக்கையில் கிடக்கின்றன. மிகத் தேய்ந்த இந்தத் தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்துவதில் மற்ற எல்லா விடயங்களை விட ஐ.தே.கட்சிக்கும் பொதுஜன முன்னணிக்குமிடையே நடைபெறும் கயிறிழுத்தலே பிரச்சினையாக இருக்கிறது.

இந்த இழுபறியில் தீர்வுத் திட்ட யோசனைகள் நைந்து போய்விட்டன. யுத்தம் நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பெற்றுவிட்டது. யுத்த வெற்றி தோல்விகளே தெற்கில் தமது அரசியல் எழுச்சி, வீழ்ச்சிகளைத் தீர்மானிக்கும் விடயமென இன்றைய அரசு கருதி அதனைச் சார்ந்து செயற்படுகிறது.

புலிகளைப் பொறுத்தவரை, யுத்தத்தைத் தவிர அவர்களது நிகழ்ச்சி நிரலில் வேறெதுவும் கிடையாது. இத்தகைய சூழ்நிலை எத்தகைய பாரதூரமான அழிவினை நோக்கி தமிழ் மக்களை கொண்டு சென்றுள்ளது என்பதை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. மனமும், உடலும் சுமைகளால் சோர்வடைந்த நிலையில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள்.

போராடுவதற்கான நம்பிக்கைகள் அடித்தளங்கள் கூட சிதைக்கப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலை இந்தியாவின் தலையீட்டை மேலும் மேலும் வலியுறுத்துவதாகவே அமைகிறது.

ஆனால் அண்மையில் இலங்கை வந்திருந்த, இந்திய வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர்களில் ஒருவரான நாகேந்திரநாத் ஜா அவர்கள் வட-கிழக்கு இணைப்பு பற்றியும், இந்தியாவில் தென்முனைக்கப்பால் நடைபெறும் முடிவில்லா யுத்தம் பற்றியும் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார்.

இதுவே இங்குள்ள பேரினவாத சக்திகளுக்கு ஜீரணிக்க முடியாததாகிவிட்டது. சொல்லக்கூடாத பாரதூரமான ஒன்றை அவர் சொல்லிவிட்டதாகவும், ஏதோ இறைமையை மீறும் செயலாகவும் பிக்குமார் உட்பட பேரினவாதிகள் கூக்குரலிட்டார்கள்.

எப்போது இந்த நாட்டின் தலைவிதி யுத்தத்துடன் இணைக்கப்பட்டதோ அன்றிலிருந்தே இறைமை, ஐக்கியம் என்பதெல்லாம் பொருளற்ற சொற்களாக மாறிவிட்டன. ஆனால் சிதைவடைந்து இல்லாமல் போய்க் கொண்டிருக்கும் பொருளற்ற சொற்பதங்கள் பற்றியே இவர்கள் அக்கறை கொள்கிறார்கள்.

ஆனால் ஏற்கனவே இந்த நாட்டின் இனப்பிரச்சினை பல்வேறு நாடுகளின், ஏன் ஐ.நா.வின் நிகழ்சி நிரலில் இடம்பெற்றுவிட்டது என்பதனை இவர்கள் மறந்துபோய்விட்டார்கள்.



நாகேந்திரநாத் ஜா

எந்த ஒரு நாடும் தனக்கு அருகாமையில் உள்ள ஒரு நாட்டில் இப்படி மூச்சுப்பிடித்து ஒரு யுத்தம் நடைபெறுவதையும், அதனால் பல விலைமதிக்க முடியாத உயிர்கள் காவுகொள்ளப்படுவதையும் அந்த நாட்டின் இறைமையின் பெயரால் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இந்தியாவிற்கு மீண்டும் தமிழர்கள் அகதிகளாகச் செல்லும் நிலை அதிகரித்துள்ளது. ஏற்கனவே ஒரு லட்சம் பேர் பத்து வருடங்களாக வாழ்கிறார்கள். இதுகூட அவர்கள் இந்தப் பிரச்சினையில் தலையிடுவதற்கான அடிப்படைகளாக அமையலாம்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால் தமிழர் தரப்பு இங்கு கூறுபட்டு நிற்கின்றது. தமக்குள்ளே ஆயிரம் வேறுபாடு. ஒன்றும் கொள்கை வேறுபாடுகள் இல்லை, ஜனநாயக மறுப்பு.

இந்த ஜனநாயக மறுப்பு உலகம் முழுவதும் தமிழர்கள் அவமானப்படுவதற்கான விடயமாகி விட்டது. வன்முறை, ஜனநாயக மறுப்பு என்பன புரையோடி விட்ட சமூகத்தின் மனிதர்களை, தமது நாட்டின் சட்ட ஒழுங்குக்குப் பிரச்சினையாக இருப்பார்களோ என்று பல நாடுகள் சந்தேகிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் ஒன்றுபடுவதும், பல்வேறு நாடுகளுக்கும் தமிழ் மக்களது பிரச்சினைகளின் நீள அகலங்களைத் தெளிவு படுத்துவதும் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அந்தவகையில் பிரதானமாக அண்டை நாட்டில் எமது நிலவரங்கள் பற்றி தெளிவாக எடுத்துக்கூறுவதும், தொடர்ச்சியாக விளங்கவைப்பதும் அவசியமாகிறது.

அதற்கு சுதந்திரமான, நேர்மையான சிந்தனைப்போக்கு அவசியம். தம்மை அறியாமலே பாரபட்சமான கருத்துக்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்போரால், கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையிலான தொடர்புகளை-முரண்பாடுகளை விளங்கவைக்க முடியாதவர்கள் இதனைச் செய்யமுடியாது.

இந்த விடயத்தில் பத்திரிகைகளும் பெரும்பங்காற்ற முடியும். பாமரத்தனமான கருத்துக்களை செய்தி ஆக்குவதை விடுத்து பொறுப்புணர்சியுடன் செயற்பட்டால் பத்திரிகைகளும் இதுவிடயத்தில் காத்திரமான ஒரு பங்களிப்பை வழங்க முடியும்.

எனவே, பல்வேறு அரசியல் கட்சிகள், அறிவுஜீவிகள், பத்திரிகைகள் வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இதுவிடயத்தில் உதவிகரமாக அமையும். ஏனெனில் கோஷ்டிகளாக தனித்தனியாக செயற்படுவதால் உண்மைகள் அடிபட்டுப் போகும்.

தற்போது தேவையானவை எமது மக்களின் விழிப்புணர்வு, எமக்குள் ஒற்றுமை, அண்டை நாட்டின் ஆதரவு. ●

---

# கூட்டணி தவறுகளை திருத்துமா



யாழ் மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் கொலையைத் தொடர்ந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி, பல்வேறுபட்ட அறிக்கைகளையும், கருத்துக்களையும் வெளியிட்டு வருகின்றது. இது மக்களை மேலும் மேலும் குழப்பத்திற்குள்ளாக்குவதாகவே அமைந்து வருகின்றது.

திருமதி சரோஜினி அவர்கள் கொல்லப்பட்டவுடன் 'சங்கிலியன் படை' என்ற ஓர் அமைப்பு அதற்கு உரிமை கோரியது. அடுத்த நாள் சங்கிலியன்படை "நாம் அவசரப்பட்டு விட்டோம், சரோஜினி எமது கொலைப் பட்டியலில் முதலாவதாக இருந்தார். ஆனாலும் நாம் கொலை செய்ய முதல் வேறு யாரோ செய்து விட்டார்கள், அவர்களுக்கு எம்து நன்றி" என இன்னொரு அறிக்கையை விடுத்தது.

இதுவே கொலையை யார் செய்தார்கள் என்பதை துலாம்பரமாகக் காட்டுகின்றது. அது மாத்திரமல்லாமல் சங்கிலியன் படையென்பது, புலிகள் தமது காரியங்களை நிறைவேற்ற உருவாக்கிக் கொண்ட ஓர் முன்னணி அமைப்பே தவிர, அது ஒன்றும் சுதந்திரமான புதிய அமைப்பல்ல என்பதும் சாதாரண மக்களுக்கே புரியும்.

நிலைமை இப்படி இருக்க, சரோஜினியைக் கொன்றவர்கள் புலிகள்அல்ல என்று கூறுவதும், வேறு ஆயுதக்குழுக்களாக இருக்கும் என்று அறிக்கை விடுவதும், யார் கொலை செய்தது என எப்படி நாம் கூறுவது என பி.பி.சி.க்கு கருத்து தெரிவிப்பதும், கூட்டணியின் குழப்பதையும், அச்சத்தையுமே காட்டுகின்றது.

திரு. அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் கொலை செய்யப்பட்ட போதும், அதற்கு புலிகள் உரிமை கோரிய போதும் கூட, புலிகள்தான் இவர்களைக் கொலைசெய்தார்கள் எனக் கூட்டணியால் கூறமுடியவில்லை. இப்பொழுது சங்கிலியன் படை உரிமை கோரிய போதும், குறைந்த பட்சம் சங்கிலியன் படைதான் இதனைச் செய்தது என இவர்களால் கூறமுடியவில்லை.

சரோஜினியின் கொலையைத் தொடர்ந்து, இன்று கூட்டணியில் பலர் இராஜினாமாச் செய்துவருகின்றார்கள். இவர்களுக்கும் சங்கிலியன் படை அச்சுறுத்தல் கடிதங்களை அனுப்பியதாலேயே அவர்கள் இராஜினாமாச் செய்கின்றார்கள். கூட்டணி உறுப்பினர்களுக்கு இருக்கக் கூடிய பாதுகாப்பற்றசூழலும், அச்சமும் அவர்களை இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கின்றது.

ஆனால் கூட்டணி சொல்கின்றது, ஏனைய இயக்கங்களுக்கு அச்சுறுத்தல் இல்லாத போது, தமக்கு மாத்திரமே இவ்வச்சுறுத்தல் ஏற்படுவதால், இது புலிகளாகவோ, சங்கிலியன் படையாகவோ இருக்க வேண்டிய அவசியம் இல்லை. வேறு ஆயுதக்குழுக்களே தமக்கு இவ்வச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக தாம் சந்தேகிப்பதாக கூறுகின்றார்கள்.

ஆனால் அவர்கள் கூறுவதிலேயே பதிலும் அடங்கியுள்ளது. ஏனையவை ஆயுதக் குழுக்களாகவோ, ஆயுதப்பாதுகாப்புடனோ இருப்பதால் அவர்களிலும் விட இலகுவான, மிரட்டக்கூடிய அச்சுறுத்தக்கூடிய கொலை செய்யக் கூடிய குழுவாக கூட்டணியே உள்ளது என்பதை மறந்துவிட்டனர். அதனால்தான் சங்கிலியன் படையினர் கூட்டணியை தமது முதலாவது இலக்காக தெரிவு செய்தனர். அவர்களை மிரட்டியே சூழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்பதுதான் அவர்களது நோக்கம்.

அதனைப் புரிந்து கொள்ளாமல், கூட்டணியின் முக்கியஸ்தர்கள் ஒவ்வொருத்தரும் வெவ்வேறுபட்ட முரண்பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதானது, மக்கள் மத்தியில் மேலும் மேலும் குழப்பங்களைத்தான் உருவாக்கும். ஜனநாயகத்தை உருவாக்க தியாகமும்தேவை, சற்று துணிச்சலும் தேவை.

அத்துடன் யாழ்ப்பாண மாநகரசபையை த.வி.கூ.கைப்பற்றிக் கொண்டதால் தமிழர்களின்அரசியல் தலமைத்துவம் மீண்டும் கூட்டணியின் கைக்கு கிட்டி விட்டதாக ஏற்பட்டுள்ள அபிப்பிராயமும் அவர்கள்மீது இலக்குவைக்க காரணமாக இருக்கலாம்.

www.padippakam.com



# நீதிக்குத் தண்டனை?



ஏவரையும் கொலைசெய்யக் கூடியவர்கள் எனக் கருதப்படுபவர்களால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களையடுத்து யாழ்ப்பாணமாவட்ட நீதிமன்றங்கள் ஸ்தம்பித நிலைமையை அடைந்துள்ளது. இது சட்டத்தையும், ஒழுங்கையும் மதிக்கும் சாதாரண பிரஜைகள் மத்தியில் மிகுந்த விசனத்தையும், கவலையும் ஏற்படுத்தக்கூடியதாகும்.

நீதிபதிகள், சட்டத்தரணிகள் நடத்திய கலந்துரையாடல்களையடுத்து கடந்த ஒன்பதாம் திகதி முதல் நீதிமன்றஅமர்வுகள் யாழ் மாவட்டத்தில் இடைநிறுத்தப்பட்டமையானது பொதுமக்கள் மத்தியில் பலவிதமான கேள்விகளையும், ஐயுறவுகளையும் எழுப்பியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் நீதிமன்றச் செயற்பாடுகள் முளைவிடத் தொடங்கி சில மாதங்கள்தான் கடந்துள்ளது. சுமார் எட்டுஆண்டுகளுக்கு முன்னர் முடமாக்கப்பட்ட நீதிமன்றச் செயற்பாடுகள் வலிகாமம் மக்களின் மீளக் குடியமர்வுக்கு பின்னர்தான் ஆரம்பமாகின. தட்டச்சு இயந்திரங்கள், தட்டெழுத்தாளர்கள், தளபாடங்கள், கட்டிடங்கள் எனப் பல வகையிலும் தட்டுப்பாடுகளும், குறைபாடுகளும் மலிந்து போயிருக்கும் நிலையிலும் நீதிமன்றங்கள் இயங்கத் தொடங்கின.

பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பக்கூடிய அரசாங்க நிறுவனம் ஒன்று செயற்பாட்டை ஆரம்பித்திருந்தமை பற்றி மக்களுக்கு ஓரளவு நம்பிக்கை தோன்றியிருந்தது. இதே நம்பிக்கையின் பிரதிபலிப்பாகவே க. கேசவன், மு. திருநாவுக்கரசு, ஏகநாதன், பாலச்சந்திரன் போன்ற நீதிபதிகள் பதவிப்பொறுப்புகளை ஏற்று யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி, பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களின் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தனர்.

குடாநாட்டில் தங்கியிருந்த சட்டத்தரணிகள் பலரும் கறுப்புக் கோட்டுகளை தூக்கி மாட்டிய வண்ணம் நீதிமன்ற செயற்யாடுகளுக்கு உறுதுணையாகினர். தமிழீழ சட்டக்கல்லூரியை நிறுவி தமிழீழ சட்டக் கோவையை வடிவமைத்து தமிழீழ நீதிமன்றங்களில் தோன்றி வாதாடியமையை இந்தச் சட்டத்தரணிகளில் பலரும் வசதியாக மறந்து போயிருக்கக்கூடும்.

எனினும், துண்டுக் காகிதங்கள் மூலம் விடுவிக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்து நீதிமன்றங்கள் மூடுவிழாக் கண்டமை குறித்து யாழ்ப்பாண மக்கள் பெருமைப்படுவதாக இல்லை. அமர்வுகள் காலவரையறையின்றி இடைநிறுத்தப்பட்டமைக்கான காரணங்கள்குறித்து உத்தியோகபூர்வமாக அறிவித்தல் பலகையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் வரிகளுக்குஇடையில் மட்டுமன்றி எழுத்துக்களுக்கு இடையிலும் வாசித்துப் பொருள் விளங்கக்கூடியவர்கள் நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் தத்தம் சுயபாதுகாப்புக் கருதியே உத்தியோகபூர்வ செயற்பாடுகளை இடைநிறுத்தியதாக தெரிவிக்கின்றனர்.

## அச்சுறுத்தல்கள்

யாழ் மாநகர முதல்வர் திருமதி சரோஜினி சுட்டுக்கொல்லப்பட்டதும், வர்த்தகப் பிரமுகர் நமசிவாயம் வெட்டிக்கொல்லப்பட்டதும், அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த இரு வெவ்வேறான சம்பவங்கள். தனிமனிதர்களின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்பதே இச்சம்பவங்கள் புலப்படுத்தும் செய்தி எனலாம்.

> ★ துரோக முத்திரை குத்தப்பட்டு விடுமோ, உயிர் பறிக்கப்பட்டு விடுமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர்.
>
> ★ 15,000 அடி உயரத்திற்கும் மேலாகப் பறந்து வந்து கொழும்பில் தஞ்சமடையும் மக்களின் மன உணர்வுகள் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியவை.
>
> ★ ஒருமைப்பட்ட இலங்கைக்குள் தொடர்ந்து வாழப் போகின்றோமா அல்லது தனிநாட்டுக்கான போர் தொடரப்படுவது நியாயமா என்ற கேள்விக்கு இந்த நாட்டில் வாழும் தமிழர் ஒவ்வொருவரும் விடை காண வேண்டிய தேவை வந்துவிட்டது என்பதையே ஒவ்வொரு சம்பவமும் உணர்த்துகின்றன.

இதனை உணர்ந்து கொண்டமையே உள்ளூராட்சிச்சபைகளுக்கு தெரிவான உறுப்பினர்களில் பலரும் பதவிதுறப்புக் கடிதங்கள் எழுதிவருவதற்குக் காரணம் எனலாம்.

விடுதலை விரும்பிகளின் பெயராலும் நலன் விரும்பிகளின் பெயராலும் எழுதப்படும் கடிதங்கள் விடுக்கும் எச்சரிக்கைகளை சிறுபிள்ளைத்தனமானவை எனத் தட்டிக்கழிக்க முடியாமலுள்ளது. இதனாலேயே பதட்டமும், பய உணர்வும் தொற்ற வைக்கப்படுகின்றன.

இத்தகைய அச்சுறுத்தல்கள்தான் நீதிமன்ற செயற்பாடுகளின் இடைநிறுத்தத்திற்கு காரணமெனலாம். எனினும் சட்டத்தரணிகளோ, நீதிபதிகளோ மற்றும் மாவட்ட நீதித்துறையைச் சேர்ந்தவர்களோ தமக்கு கிடைத்த அச்சுறுத்தல்கள் பற்றிய விபரத்தை முழுமையாக தெரிவிப்பதாக இல்லை.

சிறீலங்கா அரசாங்கத்தின் சட்டங்களுக்கும், அரசியலமைப்பிற்கும் கட்டுப்பட்டவர்கள்தானே நீங்கள், அதற்கு விசுவாசமாகத்தானே நீங்கள் தொழிற்பட வேணும் என்று யாழ்ப்பாண சட்டத்தரணி ஒருவரைக் கேட்டபோது, அவர் பின்வருமாறு குறிப்பிட்டார். "These things are for the survival tactics, not policy decisions. we are committed for our rights." என்பது அவரது அபிப்பிராயம். இது எந்தளவுக்கு பொருத்தப்பாடானது என்பது ஒவ்வொருவரும் தத்தம் மனசாட்சியிடம்கேட்டுக்கொள்ள வேண்டியதாகும்.

‘சூரியகாந்தி’ பத்திரிகை தொடர்பான வழக்கில் ஏற்பட்ட குறுக்கீடுகள், படையினர் மீது பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட வழக்குகளில் நீதிமன்றங்களின் நடத்தை என்பன போன்றவை திருப்தியளிக்காததாலேயே நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்படுத்தப்பட்டதாகச் சமாளிப்புகள் சொல்லப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் ஏற்புடையன அல்ல என்ற எண்ணம் தோற்றுவிக்கப்படுவதும் எச்சரிக்கை; மிரட்டல்களால் நீதிமன்றங்கள் செயற்பாடுகளை இடைநிறுத்துவதும் சமூகத்தில் சட்டம், ஒழுங்கு பேணப்படுவதற்குப் பெரும் குந்தகத்தையே ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

## பாதிப்புக்கள்

வடபகுதியில் கைது செய்யப்படுபவர்கள்பற்றிய வழக்கு விசாரணைகள் அநுராதபுரம்நீதிமன்றத்தில் நடத்தப்படும் நிலைமை மாற்றப்பட வேண்டும்.... யாழ் மாவட்ட நீதிமன்றங்களிலேயே இவ் வழக்குகளும் விசாரிக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.... என்பன போன்ற கோரிக்கைகள் மேற்கிளம்பிவந்த சூழ்நிலையில் யாழ் மாவட்ட நீதிமன்றங்கள் செயற்படாத நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டமை பொது மக்களைப் பெருமளவில் பாதிக்கக்கூடியதாகும்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விடுதலை தாமதமாகுவதற்கும், பொலீஸார் தன்னிச்சையாகச் செயற்படுவதற்கும், சட்டம், ஒழுங்கு நிலைமைகள் சீர்படாமல் தடுப்பதற்கும், நீதிமன்றச் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமை இடம்அளிக்கக்கூடும் என்றே எதிர்பார்க்கலாம்.

அத்துடன் நீண்டகாலமாக யாழ் மாவட்டத்தில் நீதியமைச்சு செயற்பாடுகள் முடமாக்கப்பட்டிருந்தபோதும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டே வந்தன. இனியும் அந்த நிலைமை தொடருமா என்பதும் எண்ணிப்பார்க்கப்பட வேண்டியதாகும்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு இன்னமும் காணப்படவில்லையே என்ற ஆதங்கமும், அதனால் விடுதலைப்புலிகள் மீண்டும் வந்துவிடுவார்களோ என்ற ஐயப்பாடும் மக்களின் மனங்களில் இன்னமும் நிலை கொண்டுள்ளது. இதனாலேயே துரோக முத்திரை குத்தப்பட்டு விடுமோ, உயிர் பறிக்கப்பட்டு விடுமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

ஞானச்சந்திரன் முதல் பஞ்சலிங்கம் வரையாகப் பலரும் பலியாகியமையும் இங்கு குறிப்பிட்டு நினைவுகூரக்கூடியதாகும்.

எது எவ்வாறாயினும், கொழும்புடனான அரசியல் – பொருளாதார உறவுகளைத் துண்டித்து தனிநாடு அமைப்பதற்காகப் போராடுவதாகச் சொல்லப்படுவது இப்போதும் பொது மக்களுக்கு ஏற்புடையதுதானா என்பது கேள்விக்குறியே.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை திறக்கப்படாமலிருப்பதற்காக போராடப்படும் அதே சமயத்தில் 15,000 அடி உயரத்திற்கும் மேலாகப் பறந்து வந்து கொழும்பில் தஞ்சமடையும் மக்களின் மன உணர்வுகள் எண்ணிப்பார்க்கப்பட வேண்டியவையாகும்.

எனவேதான் ஒருமைப்பட்ட இலங்கைக்குள் தொடர்ந்து வாழப் போகின்றோமா அல்லது தனிநாட்டுக்கான போர் தொடரப்படுவது நியாயமாஎன்ற கேள்விக்கு இந்த நாட்டில் வாழும் தமிழர் ஒவ்வொருவரும் விடை காண வேண்டிய தேவை வந்துவிட்டது என்பதையே ஒவ்வொரு சம்பவமும் உணர்த்துகின்றன எனலாம்.

உள. கந்தசாமி

# மோசமாகிப் போகும் வவுனியா நிலைமை



**தோழர் ஆனந்தன்**
**மாவட்ட செயலாளர்**
**வவுனியா**

வட-கிழக்குப் பகுதியில் இரவு 10மணிவரை நடமாடக்கூடிய நகரமாக இருந்த ஒரே ஒரு இடம் வவுனியாவாகும். இதற்கு அடுத்தாற்போல் திருகோணமலை நகரம் காணப்படினும் திருகோணமலையில் இருட்டாகி விட்டால் இருக்கும் பதற்றம் வவுனியாவில் இருந்ததில்லை.

இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அங்கு இயல்பு வாழ்க்கை ஏற்பட்ட போதிலும் இரவு எட்டுமணியுடன் நகர் அடங்கி விடுவதாகவே தெரிகிறது. மன்னார் நகரைப் பொறுத்த வரையில் மாலை ஆறுமணியுடன் அடங்கி விடுகிறது.

மட்டக்களப்பு நகரும் இதே போலவே இருக்கின்றது. இங்கு பொது இடங்களில் சனங்களைப் பார்க்க முடியாது. இரவு நேரப் பொழுதுபோக்கு இடங்களும் வெறிச்சோடியிருக்கும். ஆனால் வுவனியாவின் நிலைமைகள் அப்படி இருந்ததில்லை. இங்கு இரவுநேரப் படக்காட்சிகள்நடைபெறுகின்றன. மதுக் கடைகளில் மதுப் பிரியர்களின் நடமாட்டங்கள்இருக்கின்றன. ஒருசில வாகனங்கள் ஓடித் திரியும். இரவு 9.15இற்கு கொழும்பிற்கான புகையிரத சேவை நடைபெறுகின்றது. விடியற்காலையும் 3.30க்கு ஒரு ரயில் சேவை உள்ளது.

இவைகளுக்காக மக்கள் போவதும் வருவதுமாக நடமாட்டம் இருந்து வருகின்றது. நகரில் எந்த இடத்துக்கும் எந்த நேரத்திலும் செல்லக்கூடிய நிலைமையே இருந்து வந்தது.

குறிப்பிட்ட சில நாட்களாக வவுனியாவின் பாதுகாப்பு நிலைமைகள் மிகவும் மோசமடைந்துவிட்டன. இங்குநிலவும் பாஸ் கெடுபிடிகள் இராணுவ கெடுபிடிகள் போன்றவற்றினால் ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகரகத்தினால் பராமரிக்கப்படும் ஆசிக்குளம் அகதிகள் முகாம் மற்றும் செட்டிகுளம் பகுதிகளில் இருந்து குறிப்பிடக்கூடிய எண்ணிக்கையானோர் மன்னார் ஊடாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

இங்குள்ளகெடுபிடிகளினால் பாதிக்கப்பட்ட அவர்கள் வேலையில்லா பிரச்சினையாலும் தவித்துள்ளனர். இந்தியா சென்றால் பசியோபட்டினியோ நிம்மதியாக வாழலாம் என்ற எண்ணத்திலுமே இவர்கள் இந்தியா சென்றதாக தெரிகின்றது.

விடுவிக்கப்படாத இடத்திலிருந்து நாளுக்குநாள் தமது அலுவல்கள் நிமித்தம் வவுனியாவிற்குள் பலநூறு பேர் வருவதும் தற்போதைய நிலமையாக உள்ளது. சில மாதங்களுக்கு முன் பாவற்குளம் பகுதிகளிலும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளிலுமுள்ள இளைஞர்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைத்து விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர்.

கொஞ்ச நாட்களாக வவுனியா அல்லோல கல்லோலப்பட்டது. “எந்தவித தொடர்புகளும் வைத்திருக்காத என் கணவரை பிடித்து விட்டனர்” என அழுத மனைவியையும், “என் பிள்ளை, தானுண்டு தன் வேலை உண்டு என சும்மா இருந்தவனை பிடித்து விட்டார்களே” என ஏங்கிய தாய்மாரையும் காணமுடிந்தது.

சில வாரங்களாக நிலைமை இன்னும் மோசமடைந்துள்ளது. கோயில்குளம் பகுதியில் புளொட் மீதுநடைபெற்ற தாக்குதல் பாராளுமன்ற உறுப்பினர் பாலச்சந்திரன் வீடு மீதான தாக்குதல் என்பன வவுனியாவில் நிலைமை மோசமடைந்துவிட்டது என்பதனைப் பறைசாற்றி நிற்கின்றன.

www.padippakam.com









# அமைதியை நோக்கி நடைபோடும் அயர்லாந்து

மூன்று நூற்றாண்டுகளாக அயர்லாந்தில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மத மக்களின் மனங்களிடையே பரஸ்பரம் குமைந்து வந்த பரஸ்பரவெறுப்பு முப்பது வருடங்களுக்கு முன்னர் பெரும் வன்முறையாக வெடித்தது. அன்றிலிருந்து இன்று வரை அயர்லாந்து மக்களின் வாழ்வு வன்முறையின் மீதே நடந்துவந்தது.

17ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த இந்த மத முரண்பாடுகள் மிக மோசமான வன்முறைகளாக 1969ம் ஆண்டு வெடித்தது. விளைவு இந்த வன்முறைக்கு இதுவரை இருதரப்பிலும் பலியானோரது எண்ணிக்கை 3248 ஆகும்.

எங்கும் குண்டுவெடிக்கலாம், யாரும் எப்போதும் கொல்லப்படலாம் என்ற நெருப்பு நிலைதான் அங்கு இதுவரை நிலவிவந்தது. சமீபத்தில் உல்ஸ்ராறில் ஏற்பட்ட சமாதான ஒப்பந்தம் அமைதி விரும்பும் அயர்லாந்து மக்களுக்கு பெரும் ஆறுதலாக அமைந்துள்ளது.

இந்த சமாதான ஒப்பந்தம் குறித்துப் பார்ப்பதற்கு முன்னர் கடந்தகால கசப்பான வரலாற்றை சற்று புரட்டிப் பார்ப்போம்.

300 வருடங்களாக நிலவிவந்த மத முரண்பாடுகளின் விளைவாய், 1922ம் ஆண்டில் கந்தோலிக்க மதத்தினர் பெரும்பான்மையாக இருக்கும் அயர்லாந்துக் குடியரசாகவும், புரட்டஸ்தாந்து மதத்தினர் பெரும்பான்மையாக இருக்கும் வட அயர்லாந்தாகவும் பிரிந்தது.

1968-69களில் சிறுபான்மையினரான கத்தோலிக்க மதத்தவர்கள் தமக்கெதிரான பாகுபாட்டுக்கெதிரான இயக்கத்தை ஆரம்பித்தனர். 1970-71களில் ஐ.ஆர்.ஏ என்றழைக்கப்படும் அயர்லாந்து குடியரசு இராணுவம் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதற்கு எதிராக புரட்டஸ்தாந்து மதத்தினரும் ஆயுதம் ஏந்தத் தொடங்கினர். இரத்தக்களரிக்கான வித்துக்கள் ஊன்றப்பட்டன.

1972 ஜனவரியில் வன்செயல்கள் வெடிக்கத் தொடங்கின. இரத்த ஞாயிறு என்று வர்ணிக்கப்படும் தினத்தில் 14 கத்தோலிக்க ஆர்ப்பாட்டக்காரர்கள் இரத்தத்தை உறைய வைக்கும் வகையில் லண்டன் இராணுவத்தால் கொல்லப்பட்டனர். இந்த வருடத்தில் கொல்லப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 474. அத்துடன் பாராளுமன்றமும் கலைக்கப்பட்டு வட அயர்லாந்து நேரடியாக இங்கிலாந்தின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1973-1974 களில் இருமதத்தினரும் இணைந்து அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு முயற்சி, புரட்டஸ்தாந்து மதத்தினரின் பொது வேலைநிறுத்தத்தால் கைவிடப்பட்டது. 1975ம் ஆண்டு ஐ.ஆர்.ஏ. அறிவித்த இரண்டு மாத கால போர் நிறுத்தம் பயனற்றுப் போனது.

1979ம் ஆண்டு ஐ.ஆர்.ஏ. மவுண்பேட்டன் பிரபுவைக் கொன்றனர். வட அயர்லாந்திலுள்ள இராணுவத்தளபதி ஐ.ஆர்.ஏ.யை இராணுவரீதியாக தோற்கடிக்க முடியாது என்று பகிரங்கமாக ஒத்துக் கொண்டார்.

1981ம் ஆண்டில் இன்னொரு அதிர்ச்சிகரமான சம்பவம் நடந்தது. பெல்ஃபாஸ்ற்றிலுள்ள சிறையில் தமக்கு அரசியல்கைதிகள் அந்தஸ்து வழங்க வேண்டி உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட பொபி ஸாண்ட்ஸ் உட்பட்ட பத்துப் பேர் சிறையில் மரணித்தனர்.

1985ம் ஆண்டில் இங்கிலாந்துக்கும், அயர்லாந்துக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் மூலம் டுப்ளினுக்கு, வட அயர்லாந்தின் உள்விவகாரங்களை நிர்வகிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டது. இது வட அயர்லாந்தில் பெரும் ஆத்திரத்தைக் கிளப்பி ஆர்ப்பாட்டங்களும், பகிஸ்கரிப்புக்களும் பரவலாகின. ஐ.ஆர்.ஏ.க்கும், புரட்டஸ்தாந்து ஆயுதக் குழுக்களுக்குமிடையில் மோதல்கள் பெருத்தன.

1993ம் ஆண்டில் லண்டனுக்கும், ஐ.ஆர்.ஏ.க்குமிடையில் இரகசியப் பேச்சுவார்த்தைகள் நடந்தன. ஆனால் இதேஆண்டு ஏப்ரல் மாதம் ஐ.ஆர்.ஏ. லண்டனில் பாரிய குண்டு வெடிப்பொன்றை நடத்தியது.

ஐ.ஆர்.ஏ.யின் அரசியல் பிரிவான 'சின்பெய்ன்' போர்நிறுத்த முயற்சியொன்றில் ஈடுபட்டது. 1994ம் ஆண்டு ஜனவரிமாதம் சின் பெய்ன் தலைவரான ஜெரி அடத்திற்கு அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதற்கான விசா வழங்கப்பட்டது. இது பிரித்தானிய அரசுக்கு அதிருப்தியைக் கொடுத்தது.

இதேவருடம் மார்ச் 30இல் ஐ.ஆர்.ஏ. மூன்றுநாள் போர்நிறுத்தத்தை அறிவித்தது. அத்துடன் ஜெரி அடத்திற்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அதிகாரத்தையும்வழங்கியது. இதேஆண்டு ஆகஸ்ட் மாதம் போர்தவிர்ப்பு நடவடிக்கையை அறிவித்தது.

லண்டன், சின் பெய்னுடனான பேச்சுவார்த்தைகள் குறித்து அறிவித்தது. புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளை இவ்வறிவுப்பு ஆத்திரப்படுத்தியது.

1995ம் ஆண்டு மார்ச் மாதம் வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், சின்ஃபெய்ன் தலைவர் ஜெரி அடத்தை சந்தித்தார்.

1996பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஐ.ஆர்.ஏ. தனது போர் நிறுத்தத்தை முறித்து இங்கிலாந்துக்கெதிராக லண்டன், ஜேர்மனி, உல்ஸ்ரார் ஆகிய இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்தியது. சின்ஃபெய்னைத் தவிர்த்து இதரகட்சிகள் சமாதானம் குறித்த பேச்சுவார்த்தைகளை யூன் மாதம் ஸ்ரோஜ்மென்ரில் ஆரம்பித்தன.

1997ஆம் ஆண்டு மே மாதம் புதிய பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளயர், சின்ஃபெய்னுடனான பேச்சுவார்த்தைக்கு முன்னர் போர்நிறுத்தத்தை அறிவிக்குமாறு சின்ஃபெய்னைக் கோரினார். பேச்சுவார்த்தைகளுக்கான கால அட்டவணையை லண்டன் அறிவித்தது.

கடந்த 21 மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தை தயாரிப்புக்கள் 17மணித்தியாலங்கள்நடந்தபேச்சுவார்த்தைகளின் பிறகு ஒப்பந்தமாக வெளிவந்துள்ளது. வன்முறைக்குள் சிக்கித் தவித்த ஜரிஷ் மக்களுக்கு நிம்மதியை அளித்துள்ள இந்த ஒப்பந்தத்தின் நாயகர்கள் நால்வர்.

பிரித்தானியப்பிரதமர் ரொனி பிளயர். இவர் இவ்வொப்பந்தம் ஏற்படுத்துவதில் காட்டிய ஆர்வமும், துணிவும் பாராட்டவேண்டிய ஒன்று.

அடுத்தவர் சின்ஃபெய்னின் தலைவர் ஜெரி அடம்ஸ். 29 வருட கெரில்லா வாழ்வை மேற்கொண்ட இந்த49வயது மனிதர், வறட்டுப் பிடிவாதத்துடன் நிற்காமல் தனது மக்களின் வாழ்வை அமைதியை நோக்கி செய்த வேலை அபரிதமானது.

இதைப்போலவே புரட்டஸ்தாந்து மக்களின் அரசியல் பிரிவான யு.யு.பி.யின் தலைவர் டேவிட் ரிம்பிளின் செயற்பாடும், அயர்லாந்துப் பிரதமர் பேற்றி அஹேர்னின் செயற்பாடும் பாராட்டத் தகுந்தது.

அயர்லாந்து மக்களின் மனதில் நிம்மதி விதைகளைத் தூவ ஆரம்பித்திருக்கும் இவ்வொப்பந்தம் சென்ற ஏப்ரல் மாதம் 10ம் திகதி அறிவிக்கப்பட்டது.அதன் பின்னர் இந்த ஒப்பந்தத்தின் சரத்துக்கள் மே மாதம் 25ஆம் திகதி அயர்லாந்துக் குடியரசிலும், வடஅயர்லாந்திலும் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் மூன்று முக்கிய விடயங்கள் இடம்பெறுகின்றன.

முதலாவது, ஜரிஷ் அரசியல் சட்டம் தொடர்பான திருத்தம். இரண்டாவது, வடஅயர்லாந்துக்கான அரசசபை ஒன்றை அமைத்தல். மூன்றாவது, வடக்கு-தெற்கு இணைந்து சபை ஒன்றை உருவாக்குதல். ☞

## 300 ஆண்டு பிரச்சினைக்கு முடிவுகாண தலைவர்களின் துணிச்சலான முயற்சி

1974இல் ஏற்பட்ட ்சனிங்டேல் உடன்பாடு, 1985இல் ஏற்பட்ட ஹில்ஸ்பரோ
உடன்பாடு இவை எல்லாமே தோற்றுப்போய்விட்டன. மரபுவழி யுத்த முறைகள்,
குண்டுத் தாக்குதல்கள் எல்லாம் ஜரிஷ் மக்களைப் பாதிக்கத் தொடங்கின. புரட்டஸ்
தாந்தர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான வேதனைகளும் சோதனை
களும் அதிகமாகின. இந்த நிலையில்தான் இந்த வருடம் ஆட்சிக்கு வந்த தொழில்
கட்சி அரசாங்கம் பாராளுமன்றத்தில் ஏகப் பெரும்பான்மையைப் பெற்றது. வட
அயர்லாந்துப் பிரச்சினைக்கு முடிவுகட்டுவது என்ற உறுதியை ஏற்றுக்கொண்டது.

இதன்விளைவால் அமெரிக்காவின் முன்னாள் செனட்டர் ஜோர்ஜ் மிச்சலை
நடுவராகக் கொண்டு பேச்சுக்கள் ஆரம்பமாகின. யுத்ததங்கள், யுத்த நிறுத்தங்கள்,
கருத்துமுரண்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி
பெரிய வெள்ளிக்கிழமையன்று சமாதான உடன்படிக்கை கைச்சாத்தானது. இந்த
சமாதான உடன்படிக்கை வட அயர்லாந்தின் வரலாற்றில் ஒரு புதிய தொடக்கத்திற்
கான, உண்மையிலேயே வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தர்ப்பத்தை இந்த உடன்பாடு
வழங்குகிறது என்று நம்பிக்கை தெரிவித்தனர். பிரிவினையில்லாத ஒரு சமரசமே
இந்த உடன்படிக்கை.

கடந்த காலத்தின் துயரச் சம்பவங்கள் ஆழமான, வருந்தத்தக்க வடுக்களை
ஏற்படுத்தியிருக்கின்றன என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். உயிரிழந்தவர்
களையோ, காயமடைந்தவர்களையோ, அவர்களின் குடும்பங்களையோ தாம் ஒரு
போதும் மறக்கவில்லை என்று உறுதியளித்தார்கள். ஒரு புதிய ஆரம்பத்தின் மூலம்
அவர்களை தாம் சிறந்த முறையில் கௌரவிக்க முடியும் என்று அவர்கள் கூறினார்
கள். சமரசம், சகிப்புத்தன்மை, பரஸ்பர நம்பிக்கை, மனித உரிமைகளுக்குப் பாதுகாப்பு
ஆகியவற்றை அடைய உறுதி பூணுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சமாதான ஒப்பந்தம் யாருக்கு வெற்றியைத் தந்திருக்கின்றது என்ற
கேள்வி இன்னமும் தொக்கி நிற்பதாகும். இரண்டு பக்கங்களுக்கும் மத்தியஸ்தராக
இருந்து அயராது பாடுபட்ட ஜோர்ஜ் மிச்சலுக்கு கிடைத்த வெற்றியா? வட அயர்லாந்
துப் பிரச்சினைக்குத் தீர்வுகண்டே தீர்வது என்று உழைத்த டொனி பிளேயருக்குக்
கிடைத்த வெற்றியா? ஏறக்குறைய 300 வருடங்களாக போராடிவந்த மக்கள் தமது
தீர்ப்பின் மூலம் சமாதான ஒப்பந்தத்திற்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். இந்த
மக்களுக்குக் கிடைத்த வெற்றியா? டொனி பிளேயருக்கு பக்கபலமாக இருந்து
இந்த உடன்படிக்கை வெற்றி பெறுவதில் உறுதுணையாக இருந்த ஜோன் மேஜருக்குக்
கிடைத்த் வெற்றியா? அயர்லாந்துப் பிரதமர் எஹர்னுக்குக் கிடைத்த வெற்றியா?
தமது கட்சிகளுக்குள்ளேயே பிரிவு ஏற்பட்ட போதிலும் அதைப் பொருட்படுத்தாமல்
துணிந்து சமாதான உடன்படிக்கைக்கு ஆதரவாக நின்ற யூனியனிஸ்ட் கட்சித்
தலைவர் டேவிட் ரிம்பிலுக்குக் கிடைத்த வெற்றியா? எத்தனையோ கஷ்ட நஷ்டங்
களுக்கு மத்தியில், எதிர்ப்புக்களுக்கு மத்தியில் சின்பெய்ன் இயக்கத்தின் அரசியல்
இயக்கத் தலைவராக இருந்து பணியாற்றிய ஜெரி அடம்ஸுக்குக் கிடைத்த வெற்றியா?
இதற்கு ஒரேயொரு பதில் மாத்திரமே இருக்கிறது. தனிமரம் தோப்பாவதில்லை.

*– நன்றி: வீரகேசரி 31.05.98 (பி. முத்தையா கட்டுரை)*

www.padippakam.com



இவற்றைத் தொடர்ந்து நிர்வாகம், பொலீஸ், மொழி, அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், மனித உரிமைப் பிரச்சினைகள், இருதரப்புக்கும் சமத்துவமான கலாசாரச் சின்னங்களை பிரதானப்படுத்துதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டு அதன் டிப்படையில் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

யூன் மாதம் தொடங்கி பொறுப்புக்கள் பகிர்ந்தளிப்பது தொடர்பான திட்டங்கள் முன்வைக்கப்படும்.

வடஅயர்லாந்தின் மீது அயர்லாந்துக் குடியரசு உரிமைகோர வாய்ப்பளிக்கும் 1997ம் ஆண்டு சட்டச் சரத்துக்களை மாற்றியமைப்பது இவ்வொப்பந்தத்தின் முக்கிய விடயம். இதன் மூலம் இணைப்புவாதிகளான புரட்டஸ்தாந்து மதத்தினர் திருப்தி அடைகின்றனர். வட அயர்லாந்து அரசஅவை வாக்கெடுப்புமூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவே அமையும்.

அல்ஸ்ரர் இணைப்பாளர் கட்சியும், சின்ஃபெயினும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வார்கள். இவ்வமைப்பே நிதி, பொருளாதார வளர்ச்சி, சமூகநலம், சுகாதாரம், சுற்றுப்புறச் சூழல், கல்வி, விவசாயம் போன்றவற்றில் நிர்வாக அதிகாரம் கொண்டதாக இருக்கும். வரி விதிக்கும் அதிகாரம் இவ்வமைப்புக்குக் கிடையாது. அதேசமயம் முக்கிய முடிவுகள் யாவும் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மதத்தினரின் பெரும்பான்மையானோரின் சம்மதத்துடனேயே எடுக்க முடியும்.

வடக்கு, தெற்கு அமைப்புக்கள் என்பது இரண்டு அயர்லாந்துகளுக்கும் பொதுவான அரசியல், நிர்வாகப் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்ளும் அமைப்பாகவே இருக்கும். டுப்ளினிலும், பெல்ஃபாஸ்டிலும் இதன் அலுவலகங்கள் இயங்கும். வடக்கு தெற்கு அமைப்புக்கள் மூலம் இரு அயர்லாந்துகளின் அரசியல் கலாசாரம் பரஸ்பரம் பயன் தருவதாகவும், ஒத்துழைப்புத் தருவதாகவும் அமையும்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் விசேட தூதரான முன்னாள் செனட்டர் ஜோர்ஜ் மிசேலும் இவ்வொப்பந்தம் உருவாக உதவியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எட்டுக் கட்சிகள் பங்குகொண்ட இந்த 17மணித்தியால இறுதிப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இழுபறி கிளின்ரனின் தொலைபேசிஅழைப்பால் முடிவுக்கு வந்ததிலிருந்து இந்த ஒப்பந்தத்தின் பின்னால் அமெரிக்க கரம் நீண்டிருப்பது தெளிவாகிறது. இந்த ஒப்பந்தம் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் வருகின்றன.

"இந்த நாள் ஒரு பொக்கிஷமாக பாதுகாக்கப்படவேண்டிய நாள். இந்த ஒப்பந்தம் பேதங்களையும், முரண்பாடுகளையும் முடிவுக்கு கொண்டுவரும்" என அயர்லாந்து பிரதமர் பேற்றி அஹேர்ன் கூறியுள்ளார்.

"வட அயர்லாந்தின் துன்பங்களை இவ்வொப்பந்தம் முடிவுக்கு கொண்டுவரும். இது ஒரு மாற்றத்துக்கான ஆரம்பம்" என பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளயர் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் "இந்தத் தலைமுறையில் சமாதானத்தைக் காண்பதற்கான அற்புதமான சந்தர்ப்பம்" எனக் கூறியுள்ளார்.

சின்ஃபெயின் தலைவர் ஜெரி அடம்ஸ் கூறுகையில், "தோல்விகளிலிருந்து படித்த பாடமே இவ்வொப்பந்தமென்றும், ஆனால் இருதரப்புமே பரஸ்பரம் நம்பிக்கை கொள்ளாவிட்டால் இந்த ஒப்பந்தத்தால் எந்தப் பயனும் வரப்போவதில்லை" என்றும் கூறியுள்ளார்.

ஐ.ஆர்.ஏ. இந்த ஒப்பந்தம் குறித்து வெளிப்படையாகக் கருத்து தெரிவிக்கவில்லை. அல்ஸ்ரார் இணைப்புக் கட்சியின் ஒரு பகுதியினர் இந்த ஒப்பந்தத்தை எதிர்க்கின்றனர்.


orange march எனப்படும் அதிதீவிரவாதிகள் இவ்வொப்பந்தத்தை எதிர்க்கிறார்கள். அபிப்பிராய வாக்கெடுப்புக்களின்படி 75 வீதமான அயர்லாந்து குடியரசு, வடஅயர்லாந்து மக்கள் இவ்வொப்பந்தத்தை ஆதரிக்கிறார்கள்.

எதிர்வரும் நாட்கள் அயர்லாந்து மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும். வன்முறைமீதான வாழ்வா, அமைதியுடனான சமாதானமா என்பதை எதிர்வரும் நாட்கள் வரலாற்றில் பதியும்.

சூர்யன்

> தேசபக்தி என்பது நம்மவர்களுக்கு அன்னியர்களால் நேரிடும் தீமைகளை மாத்திரம் ஒழிக்கும் இயல்புடையதன்று. நமக்கு நாமே செய்துகொள்ளும் அநீதிகளையும் நீக்கும் இயல்பு கொண்டது. - பாரதி

# குறுக்கெழுத்துப் போட்டி–37




### இடமிருந்து வலம்

1. இம்மாதம் கொழும்பில் நடைபெறும் மாநாட்டு நாடுகள் அமைந்துள்ள பிராந்தியம்.
5. மேடை இல்லை, மைக் இல்லை, வாழ்த்திப் பேசக் கூட்டம் இல்லை. ஆனாலும் மாதந்தோறும் நமக்குப் பொன்னாடை போர்த்துபவர்.
8. கோள்.
10. முற்காலத்தில் நிமிர்ந்து நின்று தண்டனை வழங்கிய மரம் இங்கே தலைகீழாக.
11. ம்திப்புமிக்க மஞ்சள் உலோகம் இங்கே குழம்பியிருக்கிறது.
13. தலைகீழாக இருப்பது மனிதக் கூட்டம்.
15. ஒவ்வொரு நாளிலும் மங்கள காரியங்கள் துவங்குவதற்கு உகந்ததல்லாததாக கருதப்படும் ஒன்றரை மணி நேரப் பொழுது.
17. பூச்சிகள் தரும் மெல்லிய ஆடை.
18. முருகக் கடவுளுக்கு விரதத்துக்குரிய ஆறு நாள்.
21. பிள்ளைக்கு இறுதி எழுத்தில்லை.
23. உயர்திணைத் தன்மைப் பன்மை.
24. வந்ததை விட வேண்டாம். வலியப்போய்க் கொழுவும் இந்தத் தகராறு தேவைதானா?
26. வருந்தி நெகிழ்தல். (தலைகீழ்)
27. சேறு.
28. சாதாரண குடிக்கே இப்படிக் குழம்பவேண்டுமா?
29. வடக்கில் வாழ முடியாதவர்கள் தெற்கு நோக்கி வருகிறார்கள். தெற்கே வரவிடாமல் அரசு தடுக்கிறது. இடைச்சுவர் இது.
31. ஊருக்கு ஒருத்தராவது இருப்பார். பார்த்தவர்கள் பயந்து ஒதுங்கிப் போவர்.
32. கூட்டல் குறி.

### மேலிருந்து கீழ்

1. முதல் பெயர் காற்றென்றே அறிவோம். மூக்கில் நுழைந்துவிட்டால் மூச்சு; கோபங்கொண்டு புறப்பட்டால் புயல்; நேசமாய் தடவிச் சென்றால் இது.
2. நல்ல ---- செய்வோம், அதையே ஆயுதமாக்கிக் கொள்வோம். ஆலைகளுக்கு இணையாக கல்விச் சாலைகளும் வைப்போம்.
3. உடலில் அரிப்பைத் தரும் புண்.
4. வேள்வி.
6. சதவீதம்.
7. 'டு' சேர்த்தால் தட்டையான உலோகம்.
9. நவரத்தினங்களில் வெளிர் மஞ்சள் நிறத்திலிருக்கும் கல். (தலைகீழ்)
12. 'பி' சேர்த்தால் பறக்கும்; 'பு' சேர்த்தால் தேங்காயிலிருக்கும்; 'பை' சேர்த்தால் வெள்ளைப் பூவாகும்.
14. கேடு.
16. கழுதை கெட்டால்.....
19. பிழை.
20. கல்லுடைக்கும் பெரிய சுத்தியல்.
21. பெண்ணுக்குள் ஆரம்பமாகி இதற்குள் அடங்குவதுதான் வாழ்க்கையாம்.
22. இறுதியாக.
23. இளங் காளைமாடு.
25. மலைக்கு விளிம்பு, மனிதனுக்கு வீழ்ச்சி.
26. காலுக்குக் கீழே சத்தமிடும் காய்ந்துலர்ந்த இலை இது. (தலைகீழ்)
30. இது பிடித்தால் இங்கு மட்டுமல்ல எல்லாம் தலைகீழ்தான்.

## குறுக்கெழுத்துப் போட்டி–36 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. வெசாக் | 1. வெகுமதி |
| 3. துணைவி | 2. சாதிக்காய் |
| 6. விதி | 3. ஒல்லாந்து |
| 8. குதி | 4. திணை |
| 9. சந்திரோதயம் | 5. விரோதி |
| 11. மக்கு | 6. வியப்பு |
| 13. திணிப்பு | 7. திம்பு |
| 14. திகாமடுல்ல | 10. தணிகை |
| 16. புகை | 12. குமரி |
| 17. ஒய்யாரி | 15. வேட்டையாடு |
| 21. இப்பொழுது | 18. அப்(பா) |
| 24. மக்கட்பேறு | 19. பாதுகாப்பு |
| 27. காவல் | 20. சமரசம் |
| 28. துவேசம் | 21. இறும்பூது |
| 29. சதுப்(பு) | 22. பொல்பொட் |
| 31. பூரி 32. புட்டி | 23. வழு |
| 34. கோபுரம் | 25. கதுப்பு 26. பேசரி |
| 35. துரு | 30. துர(வு) 33. தாடி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**எஸ். ஜொய் பர்னாந்து,**
**6ம் வட்டாரம்,**
**மன்னார்.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேர்கள் வருமாறு:**

1. ஏ.ஆர். பாத்துமா நுஸ்ரா,
நீதிமன்ற வீதி, திருகோணமலை.
2. தி. பகிரதன்,
பாடசாலை வீதி, கோயில் போரதீவு.
3. வை. ஆனந்தராணி,
புகையிரத நிலைய வீதி, வவுனியா.
4. எஸ். சிவபரன்,
டயஸ் பிளேஸ், கொழும்பு 12.
5. மூர்த்தி சுலோஜனா,
மங்கிகட்டு, நாவற்காடு.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 30ந் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு**

# இலாபமில்லை கவனிப்பாருமில்லை

அன்பின் ஆசிரியருக்கு,

உங்கள் பத்திரிகையின், கட்டுரைகள், விமர்சனங்கள் நன்றாகவே உள்ளன. ஆனால், இன்னும் சில நல்ல விடயங்களை உரிய நேரத்தில் தருவதில்லை.

மேலும், மக்கள் விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ யாழ் விடுவிக்கப்பட்ட பிரதேசம், குடியேறுங்கள் உங்களுக்கு சகல வசதிகளையும் செய்து தருகிறோமென இந்த அரசு உலகுக்குப் பறைசாற்றுகிறது. இது அரசியல் லாபம் கருதிச் செய்யப்படுகிறது. தென்பகுதி மக்களைத் திருப்திப்படுத்துவதே அரசின் நோக்கம்.

யாழ்ப்பாணத்தைவிட உலகப் பிரசித்திபெற்ற ஓரிடம் மன்னார் பிரதேசத்தில் உள்ள திருக்கேதீஸ்வரம்; 2500க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாரம்பரியமாய் வாழ்ந்த ஒருபகுதி. இவ்விடம் விடுவிக்கப்பட்டு ஏழு வருடமாகி விட்டது. பல தமிழ் அரசியல்வாதிகள் வந்தார்கள், போனார்கள். இன்னும் உள்ளார்கள். இரு அரசாங்கமும் மாறிவிட்டது. ஆனால், இதைக் கவனிப்பாரில்லை. இயற்கைப் பிரதேசமும் மண்வளமும் உள்ள போதிய வயல் காணிகளும் இங்கு உள்ளது. சுற்றியுள்ள கிராமங்கள் நாகத்தாழ்வு, நாவற்குளம், எள்ளுப்பிட்டி, சிறியநாவற்குளம் ஆகியஇடங்களைச் சேர்ந்த மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்க்கை நடத்தினார்கள்.

90ம் ஆண்டிலிருந்து இன்று வரை இப்பிரதேசமானது இராணுவ கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றது. இப்பிரதேசத்தில் மக்களைக் குடியேற்றுவதற்கு ஏன் அரசு தாமதிக்கின்றது?

இன்றுவரை மக்கள் அவ்விடத்திற்குச் செல்வதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஆனால், இதைச் செய்வதற்கு அரசோ, இங்குள்ள அரச அதிபர்களோ முயற்சி எடுக்கவில்லை. அப்பிரதேசமக்கள் அதிகளாகவும், பஞ்சப் பரதேசிகளாகவும் ஏழு வருடங்களாக மன்னார்த் தீவிலும், வவுனியா பிரதேசத்திலும், மடு அகதி முகாமிலும் கேட்பாரின்றி சீரழிந்த வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களை மீளக்குடியேற்றுவதனால் அரசுக்கோ, ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கோ எந்தவித அரசியல்லாபமும் இல்லாதபடியால் கவனிப்பாரற்று இருக்கின்றார்கள்.

ஆனால், மக்கள் வாழும் சூழ்நிலை காணப்படாத யாழ்ப்பாணத்தில் மக்களை மீளக்குடியேற்றுவதற்கு தமிழ்க் கட்சிகளும், அரசாங்கமும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றார்கள்.

ஆனால், அங்கு என்ன நடக்கின்றது என்பதே மக்களுக்குத் தெரியவில்லை. யாழில் இவ்வளவு அக்கறை காட்டும் அரசு ஏன் இப்பிரதேசத்தில் அக்கறை காட்டவில்லை? இனியாவது இப்பிரதேசத்திலே மக்களைக் குடியேற்ற முயற்சி செய்யுமாறு அரசைக் கேட்கின்றோம்.

நீர்வளம், நிலவளம் பிரசித்தி பெற்ற பெரும் தேவாலயம், உலகப்பிரசித்திபெற்ற திருத்தலமான திருக்கேத்தீஸ்வரமென இவ்வளவு இருந்தும் என்ன பயன்? நிலம் காய்கின்றது. கோவில்கள் விலங்குகளின் சரணாலயங்களாக இன்று காட்சி தருகின்றன. வீடுகள் வெளவால்களும், கோட்டான்களும் குடியிருக்கும் இடமாகி விட்டது.

அங்கு எல்லைக் காவலரண்களிலுள்ள இராணுவ சிப்பாய்கள் வீடுகளில் உள்ள ஓடுகள், தளபாடங்களைஎடுத்துச்சென்று தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்கின்றார்கள். அவர்களின் பாதுகாப்பிற்கு மக்களின் பொருட்கள்தானா கிடைத்தது? இப்பிரதேசமக்கள் விம்மி வெடிக்கிறார்கள். ஏன் அவ்விடத்தை கண்டும் காணாதது போல் இந்த அரசு நடக்கின்றது.ஏன்அங்குள்ள மக்களுக்கு ஓட்டுரிமை இல்லையா?

இப்படியே இப்பிரதேசம் இருக்குமானால் இவ்விடம் உருமாறி மக்கள் வாழ்ந்தார்கள் என்ற ஆராய்ச்சிக்குத்தான் உதவுமே தவிர மக்கள் வாழக்கூடியநிலை இருக்காது.

இவ்விடத்தில் மக்களை குடியேற்றி புனர்வாழ்வுஅளிக்க உதவுமாறு புதியகண்ணோட்டம் பத்திரிகை ஊடாக அரசுக்கும், அரசியல் கட்சிகளிற்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மக்கள் நலன் மக்கள் நலமென்பார் தன்னலமே பெரிதாக எண்ணுவார். இதற்கு விதிவிலக்கு யார்?

இப்படிக்கு,
பி. ஈஸ்வரன், மன்னார்.

படிப்பகம்

www.padippakam.com



# சொலமன் பதில்கள்

**தினமுரசு பத்திரிகையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் தலைவர் பிரேமச்சந்திரனை வாங்கு வாங்கென்று வாங்கியிருக்கின்றார்களே..... சொலமன் என்ன பதில் சொல்லப் போகின்றார்?**

து. முகிலன் — திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.

தினமுரசில் வெளிவரும் "துரையப்பா முதல் காமினிவரை" என்ற தொடர் பொய்யும் புனைகதையும் சேர்ந்தது எனவும், இதனை எழுதும் ரமேசின் இரட்டை வேடத்தையும் கண்ணோட்டம புட்டு புட்டு வைத்தது. இதற்குப் பதில் எழுத முடியாத தினமுரசு, ஈ.பி.ஆர்.எல். எவ். தலைவர் பற்றி இன்னொரு புனைகதையைச் சோடித்துள்ளது. உண்மைகளை ஜீரணிக்க முடியாதவரின் இன்னொரு கக்கல்.

**யாழ் நகர மேயர் சரோஜினி கொலையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

இ. தயாநிதி — மின்சார நிலைய வீதி, சுன்னாகம்.

புலிகளுக்கோர் இலகுவான இலக்கு. ஜனநாயகம், அமைதி, சமாதானத்தைப் பற்றி பேசுவோர்க்கு இது ஓர் எச்சரிக்கை. மக்கள் சேவை, அபிவிருத்தி, புனருத்தாரணம் பற்றி பேசுவோர்க்கு ஓர் அச்சுறுத்தல்.

**யாழ் மாநகர சபையின் கூட்டணி உறுப்பினர்கள் தொடர்ந்து ராஜினாமச் செய்கின்றார்களே... என்ன காரணம்?**

நா. அன்னபூரணி — கல்லுதாவளை, மட்டக்களப்பு.

உங்களைப் போன்றே அவர்களும் உயிர்வாழ ஆசைப்படுகின்றார்கள்.

**திடீரென்று அரசு பத்திரிகைகளை தணிக்கைக்குள்ளாக்கியுள்ளதே?**

சி. உதயமூர்த்தி — கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.

யுத்த நிலவரங்களும் சேதங்களும் வெளியில் தெரிந்தால் மாகாண சபைத் தேர்தலில் வெல்ல முடியாதே.

**இந்தியா அணுகுண்டு வெடித்து பரீட்சித்தது. ஏட்டிக்குப் போட்டியாக பாகிஸ்தானும் வெடித்துப் பரீட்சித்தது. அணுகுண்டுகள் என்ன ஆலம் பழங்களா?**

பு. தர்மகுலராசா — ஆஸ்பத்திரி வீதி, வவுனியா.

அமெரிக்கா அணுகுண்டை வெடித்தது. அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ரஷ்யா அணுகுண்டை வெடித்தது. ரஷ்யாவிடம் அணுகுண்டு இருந்ததால், தன்னைப் பாதுகாத்துக் கொள்ள சீனா அணுகுண்டை வெடித்தது. சீனாவிடம் அணுகுண்டு இருந்ததால் தன்னை தற்காத்துக் கொள்ள இந்தியா அணுகுண்டு வெடித்தது. இந்தியாவிடம் இருந்து தற்காத்துக் கொள்ள பாகிஸ்தான் அணுகுண்டை வெடித்தது. இனி பாகிஸ்தானிடமிருந்து தற்காத்துக் கொள்ள ஈரான் வெடிக்கலாம். அப்படியே இஸ்ரேல்......என்று இது தொடரக்கூடும். எனவே அமெரிக்காவிற்கும், ஏனைய அணுகுண்டுகளை அடுக்கி வைத்திருக்கும் நாடுகளுக்கும் உள்ள ஒரே வழி முழு அணுஆயுதங்களையும் இல்லாமற் செய்வதே. பதட்டப்படத் தேவையில்லை. யாவும் நன்மைக்கே.

**ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்வுத்திட்டத்தின் இறுதிப்பகுதிக்கு என்ன நடந்தது?**

த. செல்லம் — மடு றோட், மன்னார்.

அவசரப்பட வேண்டாம். மாகாணசபைத் தேர்தலில் அவர்களுக்கும் தமிழ் வாக்குகள் தேவைதானே. தேர்தலின் பின்னர் சில சமயம் இறுதிப் பகுதி தலையைக் காட்டக் கூடும்.

**வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, உதயன் போன்ற பத்திரிகைகள் எல்லாம், தமிழீழ விடுதலைப் புலிகளையும் அவர்களின் செயற்பாடுகளையும் வரவேற்றும், நியாயப்படுத்தியும் எழுதும்போது, கண்ணோட்டம் மாத்திரம் ஏன் விடுதலைப் புலிகளை தாக்குகின்றது.?**

த. துரைவீரசிங்கம் — பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.

விடுதலைப் புலிகளைத் தாக்க வேண்டும் என்ற எந்தக்கட்டாயமும் கண்ணோட்டத்திற்கு கிடையாது. ஆனால் உண்மைகளையும், நியாயங்களையும் எழுதும்பொழுது அது தாக்குதல் போன்றே தோன்றும். வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, உதயன் போன்ற பத்திரிகைகளின் முக்கிய நோக்கம் வியாபாரம். அது இடைஞ்சல் இல்லாமல் நடக்க வேண்டுமெனில் அவர்கள் உண்மைகளை எழுத முடியாது. கண்ணோட்டம் அப்படியல்ல.

**பி.ஜே.பி. அரசாங்கம் புலிகளுக்கு ஆதரவாக இருப்பதாக வெளிநாடுகளில் புலிகள் பிரச்சாரம் செய்கின்றார்களே, உண்மையா?**

என். இராஜரத்தினம் — மணிங் பிளேஸ், வெள்ளவத்தை.

புலிகளால் நடாத்தப்பட்ட ராஜீவ் காந்தியின் கொலையும் ஆயுதம் வாங்குவதற்கான புலிகளின் சர்வதேசத் தொடர்புகளும், புலிகளை இந்திய விரோத சக்திகளாகவே டெல்கி இனங்கண்டுள்ளது. பி.ஜே.பி வந்தபின்னும் அதில் மாற்றம் இருப்பதாகத் தெரியவில்லை.

**யாழ் மாநகர முதல்வர் திருமதி சரோஜினி யோகேஸ்வரனின் பூதவுடல் நல்லடக்கம் கொழும்பு கனத்தையில் நடாத்தப்பட்டதே. யாழ்ப்பாணத்தில் மயானங்களே இல்லையா?**

எஸ். இராஜலிங்கம் — மேதர் லேன், மானிப்பாய்.

யாழ்ப்பாணத்தில் மயானங்களே இல்லையா என்ன, முழு யாழ்ப்பாணமும் மயானம்தானே. சரோஜினியின் கௌரவத்தை விட அவரின் உறவினர்களுக்கு, அவரது சொத்துக்களே முதன்மையாகப்பட்டன. அதன் விளைவுதானாம் கொழும்பு கனத்தை விளையாட்டு. பாவம் சரோஜினி! அவரின் இறப்பைக்கூட கூட்டணியால் கௌரவப்படுத்த முடியவில்லை.

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட கணவரின் நல்லடக்கம் யாழ் மண்ணில் நடந்தது. யாழில் சுட்டுக்கொல்லப்பட்ட மனைவியின் நல்லடக்கம் கொழும்பில். இறுதிக்கிரியைகளிலும் இறப்பிலும்கூட ஒரு பொருத்தம்.





# தோழர் நாபா 8வது நினைவு தினம்

தோழர் பத்மநாபா தமிழ் மக்களின் விடுதலையுடன் ஏற்றத் தாழ்வு இல்லாத சமத்துவ சமூக அமைப்பு, சிங்கள முஸ்லீம் மக்களுடன் நல்லுறவு, இலங்கையின் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்களிப்பு ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். இந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வில் மாற்றங்களுக்காக அவர் ஒரு புரட்சிகர வாழ்வை மேற்கொண்டார்.

தனது 39 வருட கால வாழ்க்கையில் அரைவாசிக் காலத்தை இவற்றுக்காக அர்ப்பணித்தவர்.

யாழ் குடா நாட்டு செம்மண் பிரதேச ஒடுக்கப்பட்ட விவசாயிகள், மலையக தோட்டத் தொழிலாளர்கள், திருமலை மீனவர்கள் மத்தியில் வேலை செய்தார். 1978ல் மட்டக்களப்பில் வீசிய சூறாவளியின் போது பாதிக்கப்பட்ட சகல கிராமங்களுக்கும் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

## பேதங்கள் தாண்டி நேசம்கொண்டிருந்தவர்

1980களின் முற்பகுதியில் சிறீமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் படி இந்தியாவுக்கு சென்ற மலையக தோட்டத் தொழிலாளர்கள் படும் பிரச்சினைகளை இந்தியாவிலுள்ள இடதுசாரி இயக்கங்கள், தொழிற்சங்க இயக்கங்களுடன் சேர்ந்து அணுகியவர்.

'ஈழச் செய்தித் தொடர்பகம்' என்ற ஒரு அமைப்பை இதே காலப் பகுதியில் இந்தியாவில் உருவாக்கி 'ஈழச் செய்தி' என்ற பெயரில் செய்தித் தொகுப்பு ஒன்றை வெளியிட்டு வந்தார். அந்த தொகுப்பின் ஊடாக ஈழமக்கள் படும் துயரங்கள் இந்திய மக்களுக்கு குறிப்பாக தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. பிற்காலகட்டத்தில் இது 'EELAM NEWS' என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

சிங்கள மக்கள் மத்தியிலிருந்த புரட்சிகர எண்ணம் கொண்ட புத்தி ஜீவிகளுடன், குழுக்களுடன் உறவைப் பேணியவர்.

சர்வதேச அளவில் ஏகாதிபத்தியஎதிர்ப்பு, இந்தியா எப்போதும் எமது நண்பன் என்று கருதியவர். உலகின் சோஷலிச முகாம், தேசிய விடுதலை இயக்கங்கள், இந்திய இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல்வேறு இந்திய சுதந்திரப் போராட்டவீரர்கள், தமிழ்ப் பற்றாளர்கள், ஈ.வெ.ரா. பெரியார் பாசறையில் வளர்ந்தவர்கள், சீர்திருத்தக்காரர்கள், பத்திரிகைத் துறையின் உச்சங்களைத் தொட்ட பத்திரிகைஆசிரியர்கள், அறிவுஜீவிகள், எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய ரயில்வே தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் இவருக்கு நண்பர்களாக இருந்தார்கள்.

இதை ஏன் இங்கு குறிப்பிடுகின்றோம் என்றால் தோழர் பத்மநாபாவிற்கு தேசியப் பார்வை மாத்திரம் அல்ல, சர்வதேசியப் பார்வையும் இருந்தது என்பதை சுட்டிக் காட்டவே. விசாலமான எண்ணங்கள் கொண்ட தலைவர் அவர். ஜனநாயகம், ஒற்றுமை என்பவற்றை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். தமிழர் இயக்கங்களிடையே அவர் ஒற்றுமையை வலியுறுத்தினார். மாறுபாடுகளுக்கிடையே தேசிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சக்திகளை ஒன்றிணைக்க முயற்சித்தார்.

இன்னொரு தளத்தில் மலையக, சிங்கள, முஸ்லீம் மக்களை உள்ளடக்கிய ஒரு பரந்துபட்ட சமூக ஜனநாயக இயக்கத்தை கனவு கண்டார். அவருடன் நெருங்கிப் பழகிய சிங்கள, முஸ்லீம், மலையக முற்போக்காளர்கள் அதனை அறிவார்கள்.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கு விஸ்தாரமான தளம் ஒன்றின் அவசியம் அவரால் உணரப்பட்டிருந்தது. உள்நாட்டில் பரந்துபட்ட வெகுஜனங்களின் பங்கேற்பு, சர்வதேச விடுதலைப் போராட்ட, சோஷலிச இயக்கங்களுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனும் உறவு, எமது தயார் நிலை என்பவற்றில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இதில் ஏதோஒன்றில் தவறு நேர்ந்தாலும் எல்லா உழைப்புக்களுமே வியர்த்தமாகிவிடும் என்பதை உணர்ந்திருந்தார்.

ஆனால் போராடும் இயக்கங்களிடையே ஜனநாயக மறுப்பு ஒரு பெரும் பிரச்சினையாக உருவாகியது. அது மக்களின் நம்பிக்கையை சிதறடித்தது. சர்வதேச அளவில், குறிப்பாக இந்தியாவில் கசப்பான அனுபவங்களை ஏற்படுத்தியது. அந்த ஜனநாயக மறுப்பே தோழர் பத்மநாபாவின் வாழும் உரிமையைக் கூட மறுத்தது. அதுவே அவரின் மரணம்.

## உறுதியும் கனிவும் எளிமையுமானவர்

தோழர் பத்மநாபா தனது சொந்தச் சுபாவத்தில் மிகமிக எளிமையானவர். நெடிதுயர்ந்த கனிவான தோற்றங் கொண்ட தோழர் பத்மநாபாவின் கண்களில் உறுதியும் கனிவும் கலந்தே இருக்கும். அவர் அதிர்ந்து பேசியது கிடையாது. மிக மெதுவாக ஆனால் ஆழ்ந்து சிந்திக்க வைப்பவையாக மிகச் சுருக்கமாக அவர் பேசுவார்.

பல நூற்றுக்கணக்கான தோழர்களின், நட்பு சக்திகளின், ஈழ மக்களின், மலையக மக்களின் இதயங்களை அவர் கவர்ந்திருந்தார். அவருடன் பழகிய எவரும் இந்த வார்த்தைகளையே பிரயோகிப்பார்கள்: "நாபா ஒரு நல்ல மனுசன்..."

இவ்வாறுதான் கட்சித் தோழர்கள் தவிர்ந்த மாற்று இயக்கங்கள், அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், மக்களும், சர்வதேச நண்பர்களும் கூறிக்கொண்டார்கள்.

## தன்னலமில்லாத மக்கள் சேவையாளன்

அவர் ஓய்வாக இருத்தல் அரிதிலும் அரிது. எந்தப் பிரச்சினை வந்தாலும் மனம் கலங்காமல் "நோ பிராப்ளம்" என்று சொல்லிக் கொண்டு வேலை செய்தவர் அவர். எத்தகைய நெருக்கடியின்போதும் அவர் துவண்டுவிடவில்லை. பணம் கையில் இருக்கிறதோ இல்லையோ ஆனால் அவரிடம் கவலைகள் மாத்திரம் நிற்பதில்லை.

1986க்கு பின்னர் இயக்கங்கள், அரசியல்கட்சிகளின் செயற்பாடுகள் வடகிழக்கில் முடக்கப்பட்டிருந்த நிலையில் இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கள், ஊடுருவல்கள் அதிகரித்திருந்தன. இப்போது வடகிழக்கு பூராகவும் சர்வ சாதாரணமாகிவிட்ட பொருளாதாரத்தடை அப்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகப்பட்டிருந்தது. 1987ல் நடுப்பகுதியில் பெரிய எடுப்பில் படை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஜே.ஆர். அரசு ஈடுபட்டிருந்தது.

வடமராட்சியில் "ஒப்பரேசன் லிபரேசன்"என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு ஒருபுறம் பட்டினி மறுபுறம் யுத்தம். இச் சூழ்நிலையில் இந்தியா தலையிடுவது பற்றிய செய்திகள் வெளிவரத் தொடங்கின. நிர்க்கதியான நிலையில் இருந்த மக்களுக்கு உண்மையில் வெளி சக்தியின் உதவி தேவைப்பட்டது. மக்களும் நியாயபூர்வமாகவே அதனை எதிர்பார்த்தார்கள்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று வடகிழக்கு மாகாண அரசை உருவாக்குவதில் முழுமையான பங்களிப்பை வழங்கிய தோழர் பத்மநாபா அவர்கள், தான் மாகாண அரசில் ஓர் அங்

படிப்பகம்

www.padippakam.com



கத்தவராகவில்லை. அவர் தமிழ் மக்களது விடுதலை தொடர்பாகவும் இலங்கையில் சமூக பொருளாதார விடுதலை தொடர்பாகவும் தொலைநோக்குடனான குறிக்கோள்களைக் கொண்டிருந்தார்.

ஆனால் போராடுபவர்கள், தமக்குரிய சூழலை ஜனநாயகமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் எப்போதும் அவாவுற்றார். அவர் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தோன்றிய ஜனநாயக விரோதப் போக்குகளை மாத்திரம் கண்டிக்கவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலத்தில் அரசினாலும் கிளர்ச்சிவாதிகளாலும் தெற்கில் உருவாகிய ஜனநாயக விரோதப் போக்குகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாகிய மாகாண அரசாங்கத்தின் செயற்பாடுகள் பிரேமதாசா அரசினால் சீர்குலைக்கப்பட்டு, செயற்பட முடியாத நிலை உருவாகிய பின்னர் கூட அவர் மனம் தளர்ந்துவிடவில்லை.


இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற தோழர்களின் பராமரிப்பு, குடும்பங்களின் பிரச்சினைகள், சிதறுண்ட நிலவரங்களுக்கு மத்தியில் கட்சியின் இரண்டாவது காங்கிரசைக் கூட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார். எமது கட்சியின் முன்னேற் றங்கள், பின்னடைவுகள், சரி பிழைகள் பற்றிய சுயவிமர்சனம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அவருடைய இறுதிக் காலத்தில் அவருடைய கையில் சேகுவேராவின் சிறு நூல் ஒன்று காணப்பட்டது. "மனிதமும் சோஷலிசமும்"என்ற நூல் அது. ஒரு வெகுஜனங்களுக்கான இயக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான கோட்பாடுகள் அதில் அடங்கியிருந்தன.

அவர். சென்னை கோடம்பாக்கத்தில் 12 தோழர்களுடன் படுகொலை செய்யப்பட்டபோது தமிழகம் அதிர்ச்சியில் உறைந்து போயிற்று. தமிழக மக்கள் ஈழப் போராட்டத்தின்மீது வைத்திருந்த நம்பிக்கைகள் தவிடுபொடியாவதற்கு முதல் கால்கோளிட்டது இந்தப் படுகொலையே.

அவர் எந்தளவு தூரம் அங்கு வேலை செய்தார், எத்தகைய மானிட சக்தி அவரிடம் இருந்தது என்பதற்கு அவருடைய இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்களும், தலைவர்களும் அறிஞர்களும் சான்று.

ஒரு விசாலமான எண்ணங். கொண்ட, மக்களின் விடுதலைக்கர்க தன்னை முழுமையாக அர்ப்பணித்த அந்த உயரிய மனிதருடைய இழப்பு ஈழத்தமிழருக்கு ஏற்பட்டுவிட்ட ஒரு தலைமைத்துவ வெற்றிடமே.











தியாகிகள் தினத்தை முன்னிட்டு வவுனியா பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டியையும், நினைவுப் பொதுக்கூட்டத்தினையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் வவுனியா மாவட்டக் கிளை ஒழுங்கு செய்திருந்தது.

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான உடற்பயிற்சிப் போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் 18.06.98 அன்று இடம்பெற்றது. பங்குபற்றிய பாடசாலைகளின் கொடிகளை அவ்வப் பாடசாலைகளின் அதிபர்களும், மாகாண கொடியை அரசாங்க அதிபரும், மாவட்டக் கொடியினை கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி அவர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிக் கொடியினை செயலாளர் நாயகம் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

வவுனியா மாவட்டத்திலுள்ள பதினெட்டுப் பாடசாலைகளிலிருந்து முப்பத்து மூன்று குழுக்கள் பங்குபற்றின. போட்டிகளின் இறுதியில், மேற்பிரிவு ஆண்களில் - கந்தபுரம் வாணி வித்தியாலயம், கணேஸ்வரா மகாவித்தியாலயம், தமிழ் மத்திய மகாவித்தியாலயம் ஆகியன முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக் கொண்டன.

மேற்பிரிவு பெண்களில் - சைவப்பிரகாச மகளிர் ம.வி., இறம்பைக்குளம் ம.வி., பெரிய கோமரசங்குளம் க.உ.வித்தியாலயம் ஆகியனவும், கீழ்ப்பிரிவில் - இறம்பைக்குளம் மகளிர் ம.வி., சைவப்பிரகாச ம.வி., வெளிக்குளம் ம.வி. ஆகியனவும் பரிசுகளைத் தட்டிச் சென்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் இறந்த தோழர்களின் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டன. போட்டிகள் சிறப்புற நடைபெற அயராதுழைத்த ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மாலையில் தியாகிகள் தினக் கூட்டம் தோழர் சிவம் தலைமையில் நடைபெற்றது. கட்சியின் வவுனியா மாவட்டச் செயலாளர் தோழர் ஆனந்தன் வரவேற்புரையை நிகழ்த்தினார். செயலாளர் நாயகம் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தோழர் வாசுதேவ நாணயக்கார எம்.பி., நகரசபைத் தலைவர் ஜி.ரி. லிங்கநாதன், வி.எஸ். விசாகப்பெருமாள் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர். தோழர் ஸ்ரனிஸ் நன்றியுரை வழங்கினார்.

★ ★ ★

தியாகிகள் தினத்தை முன்னிட்டு மன்னார், திருகோணமலை மாவட்டங்களிலும் விளையாட்டுப்போட்டிகளும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.











www.padippakam.com



★ மே 14ம் திகதி பிரிகேடியர் லரி விஜேரத்தின தற்கொலைத் தாக்குதலில் படுகொலை.

★ மே 17ம் திகதி யாழ் மாநகர மேயர் சரோஜினி யோகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம்.

★ மே 30ம் திகதி குருநகர் சவுக்காலைச் சந்தி காவல் அரண் தாக்குதலில் இரு படையினர் பலி. தொடர்ந்து நடந்த அசம்பாவித அத்துமீறல் சம்பவங்களில் ஒரு இளம் பெண் சாவு. பலர் காயம்.

★ யூன் 5ம் திகதி யாழ் நகர் வர்த்தகர் சங்கத் தலைவரும் த.வி.கூட்டணியின் முக்கியஸ்தருமான நமசிவாயம் பட்டப்பகலில் வெட்டிக்கொலை.

★ பரவலாக யாழ் குடாநாட்டில் அமைந்திருக்கும் படையினரின் காவல்அரண் மீதான தாக்குதல் அதிகரிப்பும் படையினரின் உயிரிழப்பும்.

★ பிறந்த இடத்தில் இருந்த துரத்தப்பட்டவர்கள் புகுந்த இடத்தில் புகுந்து (புங்குடுதீவு) யாழ் குடாநாட்டின் அரச நிர்வாகத்தை பயமுறுத்தல் நடவடிக்கையின் மூலம் ஸ்தம்பிக்கச் செய்தல்.





# யாழ் நிலவரம்: பதற்றம் தெரிகிறது

- என்.ஆர்.சோமு

மீண்டும் யாழ்நகரை கைப்பற்றுவோம் என்று மார்தட்டிக்கொண்டிருக்கும் புலிகளின் மேற்சொல்லப்பட்டிருக்கும் நடவடிக்கைகள், யாழ் குடாநாட்டில் அதிகரித்துவரும் ஆயுதவன்முறையின் வளர்ச்சிப் போக்கையே காட்டுகின்றது.

யாழ் குடாநாட்டு காவல்அரண்கள் தாக்கப்படுவதும் யாழ் நகருக்குள் ஊடுருவி தமிழ்க் கட்சி முக்கியஸ்தர்களை கொல்வதும் புலிகளுக்கு இலகுவாக இருப்பது படையினரின் பாதுகாப்பு அரணில் ஓட்டைகள் விழுந்திருக்கிறது என்பதையே வெளிப்படுத்துகின்றது.

ஆரம்பத்தில் இருந்த இறுக்கமான பாதுகாப்பு நிலைமைகள் காலப்போக்கில் தானாகவே தளர்ந்துகொண்டு போவதாலும், படையினருக்கும் மக்களுக்கும் இடையில் இருக்கும் சுமுகமான உறவுகள் பாதிப்படையும்போதும் புலிகளின் ஊடுருவல் தாக்குதல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பேற்படுகின்றன.

ஒரு குடம் பாலுக்கு ஒருதுளி விஷம் போல மே மாதம் 30ம் திகதி குருநகர் சவுக்காலைச் சந்தியிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

இரண்டு இளம் பெண்புலிகளின் துப்பாக்கி சூடு, கிரனைட் வீச்சுக்குப் படையினர் இருவர் பலியானதற்குப் பழிவாங்கும் நோக்குடன் குறிப்பாக பெண்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பலர் காயமடைந்திருக்கிறார்கள். ஒரு இளம் பெண் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட ஒரு பெண்புலி கைது செய்யப்பட்டிருப்பதாக படையினர் கூறியிருப்பதில் உண்மை இருக்கிறது. ஆனால் அப்பாவிகள் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும் என்பதுதான் சமாதானத்தை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

படையினரால் யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டப்பட்ட புலிகள் திரும்பவந்து தாக்குவார்கள் என்பது யதார்த்த உண்மை. ஆகவே படையினர் அவதானமாக இருந்துகொண்டு புலிகளையும் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இன்று யாழ் குடாநாட்டில் வாழும் மக்கள் சமாதானத்தையும் அமைதியையும் நிம்மதியான வாழ்வையுமே விரும்புகிறார்கள். இந்த நல்ல சூழ் நிலைமையை படையினரின் வீண் சந்தேகங்களால் கெடுத்துக் கொள்ளக் கூடாது. இது விடயத்தில் அதிகாரிகள் படையினருக்கு கண்டிப்பான உத்தரவு இட்டு மக்களுடன் ஒரு சுமுகமான உறவைப் பேணுவதில் ஆர்வம் காட்ட வேண்டும். அதுதான் எதிர்கால நல்லுறவுக்கு வழிவகுக்கும்.

யாழ் குடாநாட்டின் பெரும் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தமுடியாமல் இருப்பதுதான் உண்மை. புலிகளால் தொடுக்கப்படும் தாக்குதல்கள் எதிர்காலத்திலும் தொடரும் நிலைமை இருப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது.

காடுகளில் இருந்து கடல் வழியாக குருநகர் போன்ற கரையோரப் பிரதேசங்களில் ஊடுருவி படையினருக்குதொல்லைகள் கொடுப்பதன் மூலம் தமது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்கு புலிகள் முயற்சிக்கின்றார்கள்.

யாழ் குடாநாட்டில் முக்கிய சிறுநகரங்களான பருத்தித்துறை வல்வெட்டித்துறை, நெல்லியடி, அச்சுவேலி, நீர்வேலி, சாவகச்சேரி, கொடிகாமம், பளை, மானிப்பாய், சங்கானை, உடுப்பிட்டி இன்னும் பலவும், யாழ்நகரமும் கடந்த 3 வருடங்களாக அரச கட்டுப்பாட்டில் இருக்கின்றன. தற்கொலைத் தாக்குதல் மூலமும், காவல் அரண்கள்மீதான கிரனைட்வீச்சாலும், பிஸ்டல் குழுவினரின் தனிநபர் கொலைகளும் குடாநாட்டைப் படைகளிடமிருந்து மீட்டு விடமுடியும் என்று அவர்கள் கருதுவார்களானால் அது தவறான இராணுவ அணுகுமுறையாகும்.

ஆட்பற்றாக்குறை இருப்பதால் முன்புபோல் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடாத்துவதற்கான சாத்தியங்கள் குறைவாக இருப்பதாகவே இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். இந்த நிலையில்தான் யாழ்குடாநாட்டு சிவில் நிர்வாகத்தைக் குழப்புவதிலும், தமிழ் அரசியல் கட்சிப் பிரமுகர்களைச் சுட்டுக் கொல்வதிலும் தமது கவனத்தைத் திருப்பியிருக்கிறார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

இத்தகைய நிலைமை தொடரும் பட்சத்தில், பாரிய தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று ஏற்படலாம். இந்தநேரத்திலாவது ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நேசிக்கும் தமிழ்க் கட்சிகள் ஐக்கியப்பட்டாக வேண்டும்.

## மிலேச்சத்தனமான தாக்குதல்

களுத்துறைச் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்த தமிழ் கைதிகளைப் பார்வையிடச் சென்றிருந்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ்தேவானந்தா அங்கிருந்த வேறு சில தமிழ்க் கைதிகளால் தாக்கப்பட்ட மிலேச்சத்தனமான நடவடிக்கையை ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது. சர்வதேச சமூகத்தின் முன், எமது மக்களின் நியாயமான போராட்டம் தார்மீக ஆதரவை இழந்து வரும் இன்றைய நிலையில், இச்சம்பவம், மீண்டும் ஒரு தலைகுனிவையே எமக்கு ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறான மிலேச்சத்தனமான செயல்களுக்குப் பின்னால் உள்ள சக்திகளை தமிழ் மக்கள் சரியாக அறிந்து கொள்ள வேண்டும். பல்வேறு சிறைகளிலே வாடும் ஆயிரக்கணக்கானநிரபராதிகளின் நியாயமான போராட்டங்களை, இவ்வாறான ஒருசிலரின் மிலேச்சத்தனமான நடவடிக்கையைச் சாட்டாக வைத்து அரசு உதாசீனப்படுத்தக் கூடாது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. டக்ளஸ் தேவானந்தா விரைவில் குணமடைய வேண்டுமென நாம் விரும்புகின்றோம்.



## போலிப் புலம்பல்கள் வேண்டாம்

அண்மைக் காலங்களில் யாழ்ப்பாணத்தில் மதுவகைகளின் பாவனை அதிகரித்து வருவதாகவும், வீடியோ சினிமாக் காட்சிகள் பெருகி வருவதாகவும், விபச்சாரம் மற்றும் நீலப்படக்காட்சி போன்றவை மலிந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினைகள்பற்றி சரியாக ஆராயப்பட்டு சாத்தியமானதும், பயன்தரக் கூடியதுமான வழிவகைகள் காணப்படவேண்டும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. எனினும் இந்த நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி எமது சமூகத்தில் கலாசார சீரழிவு ஏற்பட்டு வருவதாகப் புலம்புபவர்களின் உள் நோக்கம் ஐயத்திற்கு உரியதாகவுள்ளது. குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டதன் பின்னர்தான் கலாசார சீரழிவு மலிந்து வருவதாகக் குறிப்பிடுவது அதற்கு முன்பாக எல்லாம் ஒழுங்காக இருந்தது எனப் புளகாங்கிதம் கொள்வதற்கு ஒப்பானதாகும். ஆனால் உண்மையான நிலை எப்படி இருந்தது என்பது இந்த மண்ணில் தொடர்ந்து வாழ்பவர்கள் தெரிந்து கொண்ட உண்மையாகும்.

தொடருகின்ற யுத்தத்தால், இந்தியாவிலும், இலங்கையிலும், அகதி முகாம்கள் நிரம்பி வழிவதும், அங்கெல்லாம் தமிழர் கலாசாரம் என்ன பாடுபடுகிறது என்பதும் எண்ணிப் பார்க்கப்பட வேண்டியதாகும். கொழும்பு விடுதிகளிலும், வெளிநாட்டு முகவர்கள் பலரிடமும் தமிழர் குலப் பெண்கள் எந்தளவுக்கு சீரழிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டியதாகும். இடப்பெயர்வுகளாலும், குடும்ப உறவுகளின் பிரிவுகளாலும் தனிமனிதர்கள் அனுபவிக்கும் வேதனைகளும், சுமக்கும் சோகங்களும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். கசிப்பு விற்பனையும், நீலப்படக்காட்சியும் சமூகத்தில் குறுக்கு வழியில் பணம் தேட முயல்பவர்களின் இழிதொழில் என்பது உண்மையே. எனினும் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் அரசாங்க இயந்திரம் பூரணமாகத் தொழிற்படுவதற்கு போடப்படும் முட்டுக்கட்டைகளே இத்தகைய சீர்கேடுகள் மலிந்து விடுவதற்கு மூல வித்துக்களாகின்றது. எனவே, சமூகத்தை கலாசார சீரழிவிலிருந்து பாதுகாக்கும் உண்மை நோக்கம் இருந்தால் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்களுடன் ஒத்துழைக்க வேண்டியது தேவையாகிறது. இன நலத்தின் பெயராலும், விடுதலைக்கான போராட்டம் என்ற கற்பனையிலும் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைக்கப்படும்போது சமூக விரோத சக்திகளும், குறுக்குவழிகளில் லாப மீட்ட நினைப்பவர்களும் பயன்பெறுவதை தடுப்பது அசாத்தியமானதாகிறது. சட்டமும், ஒழுங்கும் பேணப்பட்டு பொலீஸ் நிர்வாகம் சீராக இயங்குவதாகக் கூறப்படும் நகரங்களில்கூட பாதாளஉலகக் குழுக்களின் செயற்பாடுகளும், ஏனைய சமூக விரோதச் செயல்களும் இடம்பெற்று வருகின்றமை கண்கூடு. எனவேதான் உண்மையாகவே சமூக நலன்களில் அக்கறை இருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பொறுப்புடையவர்கள் இத்தனை சீரழிவுகளுக்கும் மூலகாரணமான யுத்தத்தை நிறுத்திவிடுவதற்கான வழிவகையைக் காண்பதில் தங்கள் சிந்தனையைச் செலுத்த வேண்டியது தேவையாகிறது.

**ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF**

22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்